வக்கீல்

400

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

400
4.53.

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

THE VAKIL • TAMIL LAW MAGAZINE.

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

★

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,

கும்பகோணம்.

(Estd. 1925)

"வக்கீல்"
பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ஆசிரியர்]

1953 ஜூலை முதல் "வக்கீல்" புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். மற்ற விபரங்களுக்கு 1953 ஜூலை இதழ் பார்க்கவும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)
ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

NOV 1953

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 — அக்டோபர் 1953 — இதழ் 10

பூதானம் 3

சுயமரியாதை திருமணங்கள் 4

புதிய சட்டங்கள் 4

சர்க்கார் அறிக்கைகள் 5

வாரிசு வரி அல்லது 'எஸ்டேட்' வரிச் சட்டம் 6

வழக்கும் - தீர்ப்பும்

* காலாவதி தினத்தன்று இரவு 9-30 மணிக்கு முன்சீப் பின் வீட்டில் அவரிடம் பிராது தாகல் செய்யப்பட்டது. முன்சீப் அப்பிராதை வாங்கிக்கொள்ள மறுப்பதாக அதிலேயே எழுதி அதை வக்கீலின் கையில் திருப்பிக் கொடுத்துவிட்டார். தாவா செல்லுமா? 9

* ரோடு வேலை செய்யும் போது, கருங்கல் உருளையில் மாட்டிக் கொண்டு மகன் இறந்தான். தகப்பனுக்கு நஷ்டஈடு கிடைக்குமா? தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்ட விளக்கம். 10

* ஆறு நபர்கள் கூட்டாளிகளாகச் சேர்ந்து, பத்து வருடங்கள் ஒரு சினிமா நடத்துவதாக ஒப்புக் கொண்டனர். அக் கூட்டைக் கலைத்துவிட வேண்டுமென்று ஒரு வருடத்திற்குள் கூட்டாளி ஒருவர் தாவா செய்தார். கூட்டைக் கலைக்கச் சட்டம் இடம் கொடுக்குமா? 11

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 14

கேள்வியும் - பதிலும் 19

187727
600 035

"ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை"
[மண்டலம் [48 நாள்]
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை

ரூ. 43-12-0

ஸ்ரீமகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N.B:- (1) ஆர்டர் கிடைத்த 9-ம்நாள் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
கோட்டமருதூர் - அரகண்டநல்லூர். P. O.
தெ. ஆ. ஜில்லா.

கல்யாண பட்டுநூல் ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்

119, பெரியதெரு,
கும்பகோணம்.

இளம்பிள்ளைவாதம்

நீடித்ததற்கும் உத்தரவாத சிகிச்சை

இளம்பிள்ளை வாதம்-பட்சவாதம் ஒன்றே

M. R. ராஜகோபால பிள்ளை R.M.P.
மன்னப்பிள்ளைத் தெரு, மன்னார்குடி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னக்கிளி ★

சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

"ஜெயராம்" காயசுத்தி லேகியம்

REGD. No. 138512

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம் :— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 6 அக்டோபர் 1953 இதழ் 10

பூதானம்

காந்திஜீயின் பிரதான சீடர்களுள் ஒருவர் தான் வினோபா பாவே என்ற பெரியார். அன்னார் வட இந்தியாவில் பல இடங்களில் யாத்திரை செய்து, நிலமுள்ளவர்களிடமிருந்து பூமியைத் தானமாகக் கேட்டு வாங்கி வருகிறார். சமீபத்தில் ஜயப்பிரகாச நாராயண் அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருடன் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து, பூதானம் வாங்கினார். பூதானம் பெற, நயம், பயம், என்ற இரண்டு ஆயுதங்களும் முறையே பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. நிலம் உள்ளவர்கள் பூதான இயக்கத்திற்கு நிலம் கொடுக்கா விட்டால் பிறகு அவர்களுக்குச் சங்கட நிலைமை ஏற்படுமென்றும் கோடி காண்பிக்கப்பட்டது.

நிலமில்லாத சில பணக்காரர்களும், பட்டணங்களில் லக்ஷக்கணக்கான மதிப்புள்ள வீடு கட்டடங்கள் வேறுவகைச் சொத்துக்களை உடையவர்களும் தங்கள் கைப்பொருள் ஒன்றும் சேதமாகாமல் பார்த்துக் கொண்டு இப் பூதான இயக்கத்திற்குப் பூரண ஆதரவு அளித்து வருவதை மக்கள் கவனிக்காமல் இல்லை.

அது ஒருபுறம் இருக்கட்டும். சுதந்தர இந்தியாவில், மக்கள் நடத்தும் இக் குடியரசில், ஏன் இப் பிச்சை! நிலம் இருப்பவர்களிடம் நிலம் இருப்பது அநீதியானால், அதை அவர்களிடமிருந்து சட்டங்களின் மூலம் கட்டளையிட்டு எடுத்துக்கொள்ளுவதன்றோ நேரான வழி! மேலும் இது விஷயமாகச் சட்டம் வரும்போது, இப்போது பூதானம்செய்தவர்கள் அச்சட்டத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியுமா? பூதானம் வாங்கப்படும் நிலங்களை யார் யாருக்குக் கொடுப்பது? கொடுக்கும் அதிகாரம் யார் யாரிடம் இருக்கும்? கதர் ஆடை உடுத்திக் காந்திஜீயின் கொள்கைகளைப் பின் பற்றியவர்களின் எண்ணிக்கையை விடக் கதர் ஆடை உடுத்திக் கள்ள மார்க்கெட் நடத்தியவர்களின் எண்ணிக்கை தான் பன்மடங்கு அதிகமானதென்பதை நமது தலைவர்கள் அதற்குள் மறந்துவிட்டனரா! இந்தியாவைக் குட்டை குழப்பிவரும் பல இயக்கங்களில் இப் பூதான இயக்கமும் ஒன்று.

சுய மரியாதைத் திருமணங்கள்

சமீபத்தில் (26—8—53 ல்) சென்னை ஹைகோர்ட்டாரால் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பில், சட்டப்படிக்கோ வழக்கப்படிக்கோ செய்து கொள்ளப் படாத 'சுயமரியாதைத் திருமணங்கள்' செல்லாதென அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அதாவது இவ்விதம் மணம் செய்து கொண்ட இருவர்களைக் கணவன் மனைவியாகச் சட்டம் பாவிக்காது. கணவன்-மனைவி என்ற அந்தஸ்து அவர்களுக்கு ஏற்படாது. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வார்சு

பாத்தியம் குடும்பச் சொத்தில் பாகம் முதலியவை இல்லாமல் போய்விடும்என்ற நிலைமை ஏற்படுகின்றது. சென்ற சில வருடங்களாகத் தமிழ் நாட்டில் பல்லாயிரக் கணக்கான 'சுயமரியாதைத் திருமணங்கள்' நடந்திருக்கின்றன. இவை எல்லாம்செல்லாதென்ற நிலைமை ஏற்பட்டால் பல விபரீதங்கள் விளைய இடம் கொடுப்பதாகும். ஆகையால் இது வரை நடந்திருக்கும் இவ்விதத் திருமணங்களும் சரி. இனி இம்முறையில் நடத்தப்படும் திருமணங்களும் சரி, செல்லுபடி உள்ளவையே என்று உடனடியாக ஒரு சட்டம் இயற்றவேண்டியது. நமது தமிழ் நாட்டுச் சட்ட சபையின் ஒரு அவசரக் கடமையாகும். கிறிஸ்தவ விவாகங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அடிக்கடி இவ்விதச் சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. உதாரணமாக கிறிஸ்தவத் திருமணங்களைச் சட்டப்படிப் பதிவு செய்ய அதிகாரமுள்ள ஒரு பாதிரியாருக்கு இவ்வதிகாரம் ரத்துச் செய்யப் பட்ட பிறகும் இது விஷயம் தெரியாமல் அவர் பதிவு செய்த திருமணங்கள் யாவும் செல்லுமெனப் பல சட்டங்கள் இது வரை இயற்றப் பட்டிருக்கின்றன. சில சமயங்களில் இரண்டொரு கலியாணங்களைச் சட்ட பூர்வமானவையாக ஆக்கவே இவ்வகைச் சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தை நமது சட்டசபை அங்கத்தினர்கள் உடனடியாகக் கவனிக்க வேண்டியதுடன் இதில் கட்சிப் பிரதி க்ட்சி வாதங்களைப் புகுத்தாமல் இருப்பதுதான் முறை என்றும் எதிர்பார்க்கலாம்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1953 ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்.

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

12. நில ஆர்ஜிதச் சட்டத் திருத்தம். (8-7-1953) சொந்த நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளுவது பற்றிய 1894 ஆம் வருடத்திய 1-ஆவது மத்திய சட்டத்தின் செக்ஷன் 28, 34 இவைகள் திருத்தப்பட்டிருக்கின்றன. அதாவது சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நிலங்களுக்கு கலெக்டரால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட அதிகத்தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று கோர்ட்டால் தீர்ப்பளிக்கப்பட்டால், அவ்வித அதிகத் தொகைக்கு சர்க்கார், நிலத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்ட தேதி முதல் 6 சத விகிதம் வட்டியும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று இருந்தது '4 சதவிகிதம்' என்று திருத்தப்பட்டிருக்கிறது. கலெக்டரால் தொகை கொடுக்கப்படாமலிருந்தாலும் 4 சத விகிதம் தான் வட்டி சேரும்.

13. சென்னை தமாஷா வரிச் சட்டத் திருத்தம். சினிமாக் காட்சிகளுக்கு ஒரு தனி வரி விதித்த 1949 ஆம் வருடத்திய 17 ஆவது சட்டமானது 31-3-1955 முடிய அமுலில் இருக்கும் என்று அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

14. சென்னை ஜமீன் இனும் ரயத்துக்கள் பாதுகாப்புச் சட்டத் திருத்தம். 7-10-1953 உடன் அமுல் இழக்கும்படி இருந்த இச்சட்டமானது 7-10-1954. முடிய விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.

15. மங்களூர் துறைமுக அபிவிருத்திச் சட்டம். Tuticorin Port Trust Application to Mangalore Act 1953 (16-9-1953) தூத்துக்குடித் துறைமுகச் சட்டத்தைச் சில மாறுதல்களுடன் மங்களூர் துறைமுகத்துக்கு விஸ்தரிக்கும் சட்டம்.

16. சென்னை ஜாகை வாடகைக் கட்டுப்பாடு திருத்தச் சட்டம். (16-9-1953) 30-9-1953 உடன் அமுல் இழந்துவிடும்படி இருந்த இச்சட்டமானது 30-9-1955 முடிய நீடிக்கப்பட்டுள்ளது.

1953 மத்திய சட்டங்கள்.

30. ஆந்திர ராஜ்ய அமைப்புச் சட்டம் (14-9-1953) 1-10-1953 முதல் சென்னை ராஜ்யத்திலிருந்து ஆந்திர ஜில்லாக்களைப் பிரித்துத் தனி ஆந்திர ராஜ்யத்தை அமைக்கும் பார்லிமெண்ட் சட்டம்.

சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானிய லைசென்சு கட்டணம் செலுத்த கெடு. 1954ஆம் வருட லைசென்சு கட்டணம் 30-11-1953க்குள் கட்டவேண்டும்.

1952ஆம் வருடத்திய உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவுப்படி 1954 ஆம் வருடத்திற்கு லைசென்சு அல்லது விதி விலக்கு சர்டிபிகேட் வாங்க — 30-11-1953 வரை அபராதமில்லாமல் லைசென்சு கட்டணம் கட்டலாம். 31-12-1953 வரை தான் அபராதத்துடன் லைசென்சுக் கட்டணம் கட்டலாம். 1955ஆம் வருடம் முதல் அவ்விதமே அதாவது ஒவ்வொரு வருடமும் முந்திய வருடத்திய நவம்பர் 30 தேதிக்குள் அபராதமில்லாமலும், டிசம்பர் 31 தேதி வரை அபராதத்துடனும் அடுத்த வருடத்திய லைசென்சு கட்டணத்தைக் கட்டி வரவேண்டும். அபராதம் ரூ. 5 பெற்றுக் கொண்டு கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்களே தாமதத்தை மன்னித்து லைசென்சு கொடுக்கலாம். ஆனால் அபராதம் செலுத்துவதும் மேலே கண்ட கெடுவுக்குள் இருக்கவேண்டும். இது சம்பந்தமான முந்திய உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டன.

(16-9-1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II—பக்கம் 1194.)

விற்பனைவரி— நாட்டுச் செக்குகளின் சொந்தக்காரர்களுடைய கூட்டுறவு சங்கங்களுக்கு விதிவிலக்கு.

ஒன்று அல்லது பல நாட்டுச் செக்குகளுக்குச் சொந்தக்காரர்கள் சேர்ந்து அவர்களுடைய செக்குகளில் உற்பத்தியாகும் சரக்குகளில் மட்டில் வியாபாரம் செய்வதற்காக அமைத்துக் கொண்ட கூட்டுறவு சங்கங்கள் 1-4-1953 முதல் செய்யும் விற்பனைத் தொகைகளுக்கு விற்பனை வரி கிடையாதென்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

G. O. 2532—9-9-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I—1325.)

ஜமீன் இனும் வாரக் குறைப்பு விதிகள் திருத்தம்.

ஒரு கிராமத்திற்கு வாரக் குறைப்பு ஏற்படுத்தும் உத்தரவானது சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானவுடன் அந்த கிராமத்தின் ரயத்து ஒவ்வொருவரும் 1357-ம் பசலி முதல் கொடுக்கவேண்டிய மேல்வாரம் எவ்வளவு என்பதை கலெக்டர் நிர்ணயம் செய்யவேண்டுமென்று ஏற்கனவே விதிகள் இருக்கின்றன. (8-6-1948 தேதி கெஜட் பார்க்கவும்.) அவ்விதம் கலெக்டர் நிர்ணயம் செய்யும் உத்தரவை கிராமச் சாவடியிலோ கிராமச் சாவடி இல்லாவிட்டால் வேறு பகிரங்கமான இடத்திலோ ஒட்டியும், தண்டோரா மூலமாயும் அக்கிராமத்தில் பிரசுரம் செய்யப்படவேண்டுமென்று விதி 3-ல் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

(G. O. 2568—16-9-1953 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட் பாகம் I-305.)

மோட்டார் பர்மிட் புதுப்பிக்க மனுவின் மீது நான்கு மாதங்களுக்குள் உத்தரவு ஏற்படாவிட்டால்

மோட்டார் விதி 185ன் படி அல்லது 189ன் படி பர்மிட்டைப் புதுப்பிக்கவோ, 'எண்டார்ஸ்மெண்ட்' அல்லது 'எக்டென்ஷனை' புதுப்பிக்கவோ விதிகளின்படி மனுப்போட்டு அதற்கான கட்டணத்தையும் கெடுவுக்குள் கட்டிவிட்டால், அம்மனுவின் பேரில் உத்தரவு ஏற்படும் வரையில் அவை அமுலில் இருக்கும் என்றும் மனு கிடைத்த தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் யாதொரு உத்தரவும் பிறப்பிக்கப்படாவிட்டால், அவை மனுவில் கேட்டிருக்கும் காலத்திற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ, எது குறைவாக இருக்கிறதோ அக்கெடுவுக்குப் புதுப்பிக்கப்பட்டி விட்டதாக பாவிக்கப்படும் என்று இவ்விதிகளில் இருந்தது இவற்றில் 'மூன்று' மாதங்கள் என்று இருப்பதை 'நான்கு' மாதங்கள் என்று இப்போது திருத்தப்பட்டிருக்கிறது.

(12-8-1953—சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I பக்கம் 279.)

வார்சுவரி அல்லது 'எஸ்டேட்' வரிச் சட்டம்

நீங்கள் கொஞ்சம் பணக்காரர்களாக இருந்தால் தான் இச்சட்டத்தைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டும். கவலை கொடுக்கக் கூடிய அளவு ஐவேஜு எவ்வளவு என்பதைப் பற்றிப் பின்பு கவனிப்போம். மேலும் உங்களுக்கு எவ்வளவு லக்ஷக் கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் இருந்த போதிலும், நீங்கள் படுவது வீண் கவலைதான். ஏனென்றால், உங்களுக்கு வேறு எவ்விதச் செலவுகள் இருந்த போதிலும் நீங்கள் வேறு எவ்வளவோ வகை வரிகளைக் கொடுக்க வேண்டியிருந்தாலும், உங்கள் மூச்சு உள்ள வரையில் உங்களுடைய சொத்தைப் பொறுத்து இந்த 'எஸ்டேட்' வரியை நீங்கள் கொடுக்க வேண்டி வராது. ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எஸ்டேட் வரியைப்பற்றி அறிந்து கொள்ள ஆசைப்படுவீர்கள். அதாவது வேறு ஒருவர் அதிக சொத்துள்ள ஒருவர், இறந்து போய் அவருடைய சொத்துக்கள் யாவுமோ அவற்றில் ஒரு பகுதியோ உங்களுக்குக் கிடைத்தால், உங்களுக்கு வரும் அச்சொத்திலிருந்து ஒரு சிறிய பகுதியை நீங்கள் சர்க்காருக்கு எஸ்டேட் வரியாகக் கொடுக்க நேரிடும். இதை நீங்கள் பொருட்படுத்தவும் மாட்டீர்கள். ஏனென்றால், வேறு யாரோ, உழைத்தோ, உழைக்காமலோ, சம்பாதித்த சொத்துத்தானே சட்டத்தின் பலத்தால் உங்களை நாடி அடைகின்றது! இதில் ஒரு பங்கைத்தான், வேறு ஏதோ ஒரு புதிய நோக்கத்துடன், சட்டமானது உங்களிடமிருந்து இப்போது திருப்பக் கேட்கின்றது. தாராளமாகக் கசகாமல் கொடுத்து விடுங்கள். ஆனால் உங்களிடமிருந்து சட்டம் கேட்கும் தொகை எவ்வளவு என்று நன்றாகவும் நுட்பமாகவும் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு மேல் நீங்கள் அதிகமாக ஒரு தம்படி கூடக் கொடுக்கவேண்டியதில்லை.

இவ்வளவு நாள் இல்லாமல் நமது பார்லிமெண்ட் சபையானது ஏன் இப்பொழுது இவ்விதச் சட்டம் ஒன்றை இயற்றி வருகின்றது என்று உங்களுக்குத் தோன்றலாம். 'எஸ்டேட்' வரி என்பது இந்தியாவுக்குத் தான் புதிது. அமெரிக்கா, இங்கிலாந்து, இன்னும் பல ஐரோப்பிய நாடுகளில் இவ்வரியானது பல ஆண்டுகளுக்கு முன்பு தொட்டே விதிக்கப்பட்டு வருகின்றது. சில வருடங்களாகச் சில ஆசிய நாடுகளிலும் இவ்வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வரி விதிப்பின் முக்கிய நோக்கம் ஒன்று தான். இவ்வரியால் சர்க்காருடைய செலவுக்குப் பணம் கிடைப்பது கூட அவ்வளவு பெரிதல்ல. சமுதாயத்தில் ஏற்படும் மேடுப் பள்ளங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நிரவுவதே இச்சட்டத்தின் குறிக்கோளாகும். ஏராளமான மக்கள் ஒரு வேளை கூட வயிறு நிறையச் சாப்பிட வழியில்லாமல் தவிப்பது ஒரு பக்கம். இடை இடையே தம்மிடமிருக்கும் பணத்தையும் மற்ற ஐவேஜுகளையும் என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடும் தனவந்தர்கள் மற்றொரு பக்கம். அதுவும் சென்ற மகாயுத்தம் காரணமாகப் பிரமிக்கத் தக்க அளவில் பலருக்குப் பணம் குவிந்து விட்டது. இவர்கள் எல்லோரும் இப்பணத்தைச் சட்ட விரோதமான வழியில் சம்பாதித்து விட்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இவ்விதம் ஒரே இடத்தில் அதிகமாகச் சேர்ந்து போன செல்வக் குன்றுகளையும் குவியல்களையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தட்டி விடுவதே இச்சட்டத்தின் நெடுங்கால லட்சியமாகும்.

இவ்வித வரி விதிப்பை முதலில் ஆரம்பித்தவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். சொத்துக்களைச் சேர்த்தவர் உயிருடன் இருக்கும் வரை அவரை இது விஷயமாக அணுகாமல், அவர் எப்பொழுது இப்பூவுலகைவிட்டு மறையப் போகிறார் என்று காத்துக் கொண்டிருந்து அவர் மறைந்த பிறகே அவருடைய மரணத்தால் லாபமடையும் வார்சுகள் முதலியவர்களிடமிருந்து சில வரிகளை வசூல் செய்யும் இச்சட்டங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக, 'மரண வரிச் சட்டங்கள்' (Death Duties) எனப் பெயர். இவ்வித மரண வரிகளில் பல வகைகள் இருக்கின்றன. 'எஸ்டேட் வரி' (Estate Duty) வார்சுவரி (Succession Duty) முதலியவை. 'எஸ்டேட்' வரி என்பது இறந்தவருடைய எல்லா விதமான சொத்துக்களையும் மொத்தமாக மதிப்பிட்டு, அதன் மீது விதிக்கப்படும் ஒரு வரியாகும். இறந்தவருடைய சொத்துக்களை யார் யார் எந்த எந்த வீதத்தில் வார்சு முறைமையிலோ வேறு வகையிலோ அடைந்தாலும், எஸ்டேட் வரியைக் கொடுக்க அவர்கள் யாவரும் பொறுப்பாளிகளாவார்கள். அதாவது இறந்தவருடைய சொத்துக்கள் யாரிடமிருந்தாலும் அவை ஜாடா எஸ்டேட் வரிக்கும் ஜவாப்தாரியாகும். ஆனால் வார்சுவரி என்பது வேறு. இறந்தவருடைய வார்சுகள் ஒவ்வொருவரும் அடையும் சொத்து எவ்வளவோ அதற்குத் தான் வார்சுவரி கொடுக்க வேண்டும். இறந்தவருடைய மொத்தச் சொத்துக்கள் எவ்வளவு என்பதையும் மற்ற வார்சுகள் அடையும் சொத்துக்கள் எவ்வளவு என்று இதில் கவனிக்

கப்பட மாட்டாது. இவ்விதம் இரண்டுக்கும் வித்தியாசம் இருந்தாலும் 'எஸ்டேட் வரி' என்பதற்குத் தகுந்த தமிழ் வார்த்தை அகப்படாத காரணத்தினால், இவ்வரியை 'வார்சு'வரி என்றே சொல்லி வருகின்றனர்.

நமது இந்தியப் பார்லிமெண்ட் இப்போது இயற்றி இருக்கும் சட்டமானது 'எஸ்டேட்' வரிச் சட்டம். இச்சட்டமானது ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று, சட்டமாக அமுலுக்குவரும். இச்சட்ட ஷரத்துக்களை நாம் நுட்பமாகக் கவனிப்பதற்கு முன்பு சென்னை ராஜ்யத்திலிருக்கும் நாம் வேறு ஒரு அடிப்படையான விஷயத்தையும் கவனிக்க வேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, விவசாய நிலங்கள் தவிர மற்றச் சொத்துக்களுக்குத் தான் மத்திய அரசாங்கம் 'எஸ்டேட்' வரி விதிக்கலாம். விவசாய நிலங்களுக்கு அந்தந்த ராஜ்ய அரசாங்கம் தான் 'எஸ்டேட்' வரி விதிக்கலாம். (அரசியல் அமைப்புச் சட்டம் 7-வது ஷெடியூல் யூனியன் ஜாப்தா நம்பர் 88--ராஜ்ய ஜாப்தா நம்பர் 48-பார்க்கவும்.) ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 252 என்ற ஷரத்தின் படி இரண்டு அல்லது அதிகமான ராஜ்ய சட்ட சபைகள் அவ்விதம் தீர்மானம் செய்தால், விவசாய நிலங்களுக்கும் எஸ்டேட் வரி விதிக்கும் சட்டத்தைப் பார்லிமெண்டே இயற்றலாம் என்று இருக்கிறது. இது வரை பம்பாய், மத்தியப் பிரதேசம், ஒரிசா, உத்தரப் பிரதேசம், ஹைதராபாத், ராஜஸ்தான், சௌராஷ்டிரா இந்த ராஜ்யங்களின் சட்ட சபைகள் தான் தங்கள் தங்களுடைய ராஜ்யங்களிலிருக்கும் விவசாய நிலங்களுக்கு எஸ்டேட் வரி விதிக்கும் அதிகாரத்தைப் பார்லிமெண்டுக்குக் கொடுத்துத் தீர்மானங்கள் செய்திருக்கின்றன. சென்னை ராஜ்ய சபை இன்னும் அவ்விதத் தீர்மானம் செய்யவில்லை ஆனால் எஸ்டேட் வரிச்சட்டம் இயற்றப்பட்டு, அமுலுக்கு வந்த பிறகும் கூடச் சென்னைச் சட்டசபை அவ்விதத் தீர்மானம் செய்தால் போதும். அதாவது நமது ராஜ்ய சட்டசபையானது அவ்விதம் செய்யாமலிருந்து விட்டால், சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாய நிலங்களுக்குப் பார்லிமெண்ட் இயற்றும் எஸ்டேட் வரிச்சட்டம் பொருந்தாது. விவசாய நிலங்கள் தவிர மற்றச் சொத்துக்களுக்குத் தான் இச்சட்டம் பொருந்தும். ஆனால் சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாய நிலங்களின் மதிப்பையும் மற்றச் சொத்துக்களின் மதிப்புடன் கூட்டியே இறந்தவருடைய மொத்தச் சொத்தின் மதிப்பை நிர்ணயிக்க வேண்டுமென்று எஸ்டேட் வரிச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது என்பதை மட்டில் இந்த இடத்தில் கவனித்தால் போதுமானது.

இனி இச்சட்ட ஷரத்துக்களை ஸ்தூலமாகக் கவனிப்போம். எஸ்டேட் வரிச்சட்டமானது 9 பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. மொத்தம் 81 ஷரத்துக்கள் (செக்ஷன்கள்.) இருக்கின்றன. இப்பாகங்களின் தலைப்புகளைக் கவனித்தாலே இச்சட்டத்தில் அடங்கிய விஷயங்கள் எவை என்பது விளங்கும். அவை யாவன:—பாகம் (1) பீடிகை, சொற்களின் பொருள், எஸ்டேட் வரி அதிகாரிகள் (2) எஸ்டேட் வரி விதிக்கப்படுவது எப்படி எந்த எந்தச் சொத்தின் பேரில் (3) எந்தச் சொத்துக்களுக்கு எஸ்டேட் வரி கிடையாது (4) எஸ்டேட் வரி விதிக்கக் கூடிய சொத்தை எப்படிக் கணக்குச் செய்வது—எஸ்டேட் வரி விகிதம் (5) சொத்தின் மதிப்பு எப்படிப் போடப்பட வேண்டும். (6) சொத்து மதிப்பில் கழிக்கப்பட வேண்டிய இனங்கள் (7) எஸ்டேட் வரி வசூல் செய்யப்படுவது எப்படி—அப்பீல் முதலியவை (8) வரியானது சொத்தின் பொறுப்பு வரி கொடுக்கச் சில வசதிகள் (9) சில்லறை விஷயங்கள். இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு மத்திய ரிவின்யூ போர்டார் விதிகள் செய்வார்கள். பல முக்கிய விஷயங்கள் அவ்விதிகளில் இருக்கும். இவ்விஷயங்களை இனி, ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

'எஸ்டேட் வரி' என்பது எப்படி விதிக்கப்படும். எவ்வளவு ரூபாய் சொத்துக்கு இவ்வரி உண்டு.

எஸ்டேட் வரிச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இறந்துபோகும் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கும் மொத்தச் சொத்துக்களின் மதிப்பின் பேரில் எஸ்டேட் வரி என்பது விதிக்கப்படும். இறந்தவருக்குச் சொந்தமாக இருந்து அவருடைய வார்சுகளுக்கோ வேறு நபர்களுக்கோ போகும் எல்லா ஸ்தாவர ஜங்கமம் முதலிய சொத்துக்களுக்கும் மதிப்புப் போடப்படும். தம்முடைய சொத்துக்களைக் குறித்து இறந்தவர் ஏதாவது பராதீனங்களோ ஏற்பாடுகளோ செய்திருந்தாலும் சில விதிவிலக்குகளுக்குட்பட்டு அச்சொத்துக்களும் இம் மதிப்பில் சேரும்.

இச்சொத்துக்களின் சொந்தக்காரர் இறந்துபோகும் தேதியில் அச்சொத்துக்களுக்கு என்ன காலக்கிரயமோ அது தான் சொத்தின் மதிப்பாகும். இதை எப்படிக் கணக்குச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றிச் சில ஷரத்துக்கள் இருக்கின்றன. இவ்விதம் கணக்குச் செய்த

மொத்தச் சொத்து மதிப்பானது ஒரு அளவுக்கு மேல் இருந்தால் தான் ‘எஸ்டேட்’ வரி விதிக்கப்படும். இறந்தவர் ஒரு பிரிபடாத இந்து (மிதாக்ஷரச் சட்டத்திற்குட்பட்ட) குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவருடைய பாகத்தின் மதிப்பு ரூ. 50,000க்கு அதிகப்படாமலிருந்தால் அவருடைய சொத்துக்கு எஸ்டேட் வரி கிடையாது. மருமக்கத்தாயம் அலிய சந்தானக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அப்படியே. இவர்கள் தவிர, மற்ற எவர் இறந்தாலும் இறந்தவருடைய சொத்தின் மொத்த மதிப்பானது ஒரு லக்ஷ ரூபாய்க்கு அதிகப்படாமலிருந்தால் அவருடைய சொத்துக்களுக்கும் எஸ்டேட் வரி கிடையாது.

அதாவது ஒரு லக்ஷ ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள சொத்துக்களை உடையவர் இறந்து போனால் தான் எஸ்டேட் வரி விதிக்கப்படுமென்று பொதுவாகச் சொல்லலாம். இந்து பிரிபடாத குடும்பங்களுக்கு லக்ஷ ரூபாய் மதிப்புக்கு மேல் ஜைவேஜா இருந்தாலும், இறந்தவருடைய பாகத்தின் மதிப்பு என்ன என்று பார்த்து, அம்மதிப்பானது ரூ. 50,000க்கு மேல் இருந்தால் மட்டில் அதற்கு எஸ்டேட் வரி விதிக்கப்படும். (சென்னை ராஜ்யத்தில் நாம் பொதுவாகப் பின்பற்றும் இந்துச் சட்டத்திற்கு ‘மிதாக்ஷரா’ச் சட்டம் என்று பெயர்.) ஆனால் பிரிபடாத இந்துக் குடும்பத்தில் இறந்து போகும் நபர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவாவது இருக்க வேண்டும். அல்லது அவருக்குத் தகப்பனோ, பாட்டனோ, அல்லது அதற்கு மேற்பட்ட ஆண் மூதாதைகளோ அக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக இல்லாமல் இருக்கவேண்டும். உதாரணமாக, இந்து பிரிபடாத குடும்பத்தில் தகப்பன் இருக்கும் போது 18 வயதுக்குட்பட்ட அவருடைய மகன் இறந்தால் எஸ்டேட் வரியே கிடையாது. தகப்பனிருந்தும், இறக்கும் மகனுக்கு 18 வயதுக்கு மேல் இருந்தால் இறந்த மகனுடைய வீதச்சொத்தின் மதிப்பின் பேரில் எஸ்டேட் வரி உண்டு. தகப்பன் பாட்டன் ஒருவருமில்லாமல் சகோதரர்களோ, சிற்றப்பன் அல்லது பெரியப்பன் போன்ற உறவினர்கள் மட்டில் அக்குடும்பதில் ஒன்றாக இருக்கும்போது 18 வயதுக்குட்பட்ட ஒரு அங்கத்தினர் இறந்தாலும், அவருடைய பாகத்திற்கு எஸ்டேட் வரி உண்டு.

(தொடரும்)

எஸ்டேட் வரி விகிதங்கள் பின் வருமாறு

பிரிபடாத மிதாக்ஷர இந்து பாகஸ்தரின் பாத்தியம், மருமக்கத்தாயம், அலியசந்தானக் குடும்பங்கள் இவைகள் சம்பந்தப்பட்ட வரை

எஸ்டேட்டின் மதிப்பு	வரி விகிதம்
(1) முதல் 50000 ரூபாய்க்கு	வரி இல்லை
(2) அடுத்த 50,000 ரூ வரை	5% சதவிகிதம்
(3) அடுத்த 50,000	,, 7½%
(4) அடுத்த 50,000	,, 10%
(5) அடுத்த 1,00,000	,, 12½%
(6) அடுத்த 2,00,000	,, 15%
(7) அடுத்த 5,00,000	,, 20%
(8) அடுத்த 10,00,000	,, 25%
(9) அடுத்த 10,00,000	,, 30%
(10) அடுத்த 20,00,000	,, 35%
(11) பாக்கி ஜாடாவுக்கும்	40%

மற்ற வகை சொத்துக்கள் சம்பந்தப் பட்டவரை

எஸ்டேட்டின் மதிப்பு	வரி விகிதம்
(1) முதல் 1,00,000 ரூபாய்க்கு	வரி இல்லை
(2) அடுத்த 25,000	5% சதவிகிதம்
(3) அடுத்த 50,000	7½%
(4) அடுத்த 50,000	10%
(5) அடுத்த 1,00,000	12½%
(6) அடுத்த 2,00,000	15%
(7) அடுத்த 5,00,000	20%
(8) அடுத்த 10,00,000	25%
(9) அடுத்த 10,00,000	30%
(10) அடுத்த 20,00,000	35%
(11) பாக்கி ஜாடாவுக்கும்	40%

பட்டு ஸ்ரீ நூலில் தயாரித்த

இடுப்புக் கயிறு, தாலிக் கயிறு, குடைக் கயிறு, கட்டுக் கயிறு, பெட்ரூம்லேட்டுத் திரி, பூணூல் முதலியவை கிடைக்கும்.

எழுதுக:-

ஸ்ரீ ஜானகி & கோ.,
39-A, பால்மால் குருக்குத் தெரு,
மதுரை.

‘எஸ்டேட்வரி’ச் சட்ட ஷரத்துக்கள் இந்த இதழ் முதல் தொடர்ச்சியாக அடுத்து வரும் “வக்கீல்” இதழ்களில் நுட்பங்களுடன் விளக்கப்பட்டுவரும். இனி இயற்றப்படும் விதிகளும் அவ்வப் பொழுது வெளியாகும்.

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

காலாவதி தினத்தன்று இரவு 9-30 மணிக்கு முன்சீப்பின் வீட்டில் அவரிடம் பிராது தாகல் செய்யப்பட்டது. முன்சீப் அப்பிராதை வாங்கிக்கொள்ள மறுப்பதாக அதிலேயே எழுதி அதை வக்கீலின் கையில் திருப்பிக் கொடுத்து விட்டார் தாவா செல்லுமா?

[ஆதாரம்:—1953ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—அலகாபாத்—609.]

சின்ன விஷயங்கள் சில சமயங்களில் விசித்திர முடிவை அடைகின்றன. துலாராம் என்பவருக்குப் பஜன்சிங் என்பவர் 22-8-1944ல் ரூ. 800க்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருந்தார். 22-8-1947 அன்று எங்கேயோ வெளியே போயிருந்த துலாராம் வீடு திரும்பியதும், இப்பிராமிசரி நோட்டு எழுதப்பட்டு அன்று மூன்று வருடங்கள் பூர்த்தியாகிறதென்பதையும், அன்று அந்நோட்டின் பேரில் கோர்ட்டில் பிராது தாகல் செய்யப்படாவிட்டால், அது காலாவதியாகிப் போய் விடுமென்பதையும் அவர் உணர்ந்தார். கோர்ட் இருப்பது வேறு ஊர். அவர் உடனே அவ்வூருக்குப் போய் ஒரு வக்கீல் வைத்து, அவசர அவசரமாகப் பிராது தயார் செய்தார். ஆனால் கோர்ட் கலைந்துவிட்டது. இரவு மணி 9-30க்கு அவருடைய வக்கீலரனவர் பிராதை எடுத்துக்கொண்டு முன்சீப்தாருடைய வீட்டுக்குப்போய் அத்தாவாவை வாங்கிக் கொள்ளும் படி முன்சீப்பிடம் கேட்டுக்கொண்டார். முன்சீப் சம்மதிக்கவில்லை. ஆனால் அவ்விஷயத்தை அப்பிராதின் பின்புறத்திலேயே முன்சீப் எழுதினார். அதாவது—"22-8-1947 இரவு 9-30 மணிக்கு என் வீட்டில் வக்கீலால் இப்பிராது என்னிடம் கொடுக்கப்பட்டது. இவ்வளவு நேரம் கழித்து இதை ஏற்றுக் கொள்ளுவது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. ஆகையால் நான் இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன். பிராதை வக்கீலிடமே திரும்பக் கொடுத்துவிட்டேன்" என்பது தான் முன்சீப்தாரின் உத்தரவு. பிராதும் வக்கீலிடமே கொடுக்கப்பட்டு விட்டது. இவ்வுத்தரவின் பேரில் வாதி அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' செய்தார்.

பிராது தாகல் செய்யப்பட்டது முறையா? முன்சீப் செய்தது சரிதானா, என்ற பிரச்னைகள் எழுந்தன. காலாவதிச் சட்டத்தில், ஒவ்வொரு தாவாவுக்கும் காலாவதிக் காலம் எவ்வளவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காலாவதிக் கடைசி தினத்தில், கோர்ட்டின் ஆபீஸ் நேரத்திற்குள் தான் பிராது தாகல் செய்யப்பட வேண்டுமென்றும், அந்நேரத்திற்குப் பிறகு காலாவதி ஏற்படுமென்றும் அச்சட்டத்தில் சொல்லப்படவில்லை. ஆகையால் காலாவதி தினம் பூராவும், அதாவது அன்று இரவு 12 மணி வரையில், காலாவதி கெடு உண்டு. அப்படியானால் அன்று கோர்ட் கலைந்த பிறகு என்ன செய்வது? ஆபீஸ் நேரத்திற்குப் பிறகும் அக்கோர்ட்டின் நீதிபதியானவர் எந்த இடத்திலும் பிராதை வாங்கிக் கொள்ள அவருக்கு அதிகாரமிருக்கின்றது. ஆனால் அவர் கோர்ட் நேரத்திற்குப் பின்பும் அவ்விதமான பிராதுகளைக் கட்டாயமாக வாங்கிக் கொள்ளத்தான் வேண்டு

மென்றும் சட்டம் அவரைக் கட்டாயப் படுத்தவில்லை. அதாவது முன்சீப் அல்லது ஜட்ஜ் இஷ்டப்பட்டால், கோர்ட்டுக்கு வெளியேயும், தம்முடைய வீட்டிலும், பிராதுகளை வாங்கிக் கொள்ளலாம். வாங்கிக் கொள்ளவும் அவர் மறுக்கலாம்.

தாவா வழக்கில், முன்சீப் ஆனவர் பிராதை வாங்கிக் கொள்ளவே மறுத்திருந்தால் அவர் செய்தது தவருகாது. தாவாவும் காலாவதியாகிப் போயிருக்கும். ஆனுல் அவர் அப்படிச் செய்யவில்லை. பிராதைத் தம் கையில் வாங்கிக்கொண்டு விட்டார். காலாவதிக் கெடுவுக்குள் தாவாவானது தாகல் செய்யப்பட்டுவிட்டது. அவர் அதை உடனே வக்கீலிடமே திருப்பிக் கொடுத்து விட்டதுதான் தவறென ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். வாங்கிக்கொண்ட பிராதைச் சட்டப்படி எவ்விதம் மேல் நடத்தி இருக்க வேண்டுமோ அவ்விதம் முன்சீப் செய்திருக்க வேண்டுமென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, வாதியின் பிராது ஏற்றுக்கொள்ளப்பட்டது. வாதி ரூ. 5 தான் பிராதில் ஸ்டாம்பு ஒட்டி இருந்தார். பாக்கி ஸ்டாம்பை ஒட்டிக் கொடுக்கும்படிக்கும் தாவாவை ஏற்றுக் கொண்டு மேல் நடத்தும்படிக்கும் ஹைகோர்ட்டார் உத்தரவு செய்தனர்.

ரோடு வேலை செய்யும் போது, கருங்கல் உருளையில் மாட்டிக்கொண்டு மகன் இறந்தான். தகப்பனுக்கு நஷ்டஈடு கிடைக்குமா?. தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்ட விளக்கம்.

[ஆதாரம்:-1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் —மதாஸ்—766.]

சர்க்கார் பொது மராமத்து இலாக்கா கண்ட்ராக்டர் ஒருவர் ரோடு வேலைக்காகக் கூலியாட்களை அமர்த்திக் கொண்டு வேலை நடத்திக்கொண்டிருந்த சமயம் அக்கூலியாட்களில் ஒரு சிறுவன், கருங்கல் 'ரோலரி'ல் மாட்டிக்கொண்டு உயிர் நீத்தான். மராமத்து இலாக்கா சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியர் இச்சம்பவத்தைத் தொழிலாளர் நஷ்ட ஈட்டுக் கமிஷனர் என்ற அதிகாரிக்குத் தெரிவித்தார். தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டவிதி23(1) இன்படி முதலில் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரால் இச்சம்பவத்தைப் பற்றி விசாரணை நடந்தது. இறந்த கூலியாளுக்குத் தகப்பன், தாய், ஒரு தம்பி, ஒரு தங்கை—இவ்வுறவினர்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. இறந்த தொழிலாளரின் தகப்பனும், கண்ட்ராக்டரும், வேறு ஒரு சாட்சியும் விசாரிக்கப்பட்டனர். இறந்தவருக்கு வயது 16 தானென்றும், அவன் ஒரு சோகை என்றும், தினசரி அணு 6 தான் கூலி சம்பாதித்துக் கொண்டிருந்தானென்றும் கண்ட்ராக்டர் சாட்சி சொன்னுர். இறந்தவருக்கு வயது 25 என்று தகப்பன் வாக்கு மூலம் கொடுத்தார். இறந்த கூலிக்காரருடைய குடும்பம் மிக எளிய குடும்பமென்றும், தகப்பனும் சரி மகனும் சரி கூலி வேலைசெய்து தினசரி சுமார் எட்டணு தான் சாம்பாதித்து வந்து வயிறு வளர்த்ததாகவும் ருசுவாயிற்று.

இவ்விஷயங்களைப் பற்றி எல்லாம் ஏன் விசாரணை செய்யவேண்டுமென்ருல், 1923 ஆம் வருடத்திய தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் (The Workmen's Compensation Act 1923) என்ற மத்தியச் சட்டப்படி தொழிலாளர் ஒருவர் வேலை செய்து கொண்டிருக்கும் போது அவ்வேலை காரணமாக அவருக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் அதற்கு முதலாளி, அதாவது அவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டவர், நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். அவ்விபத்தினுல் தொழிலாளர் இறந்து போய் விட்டால், நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு என்றும், தொழிலாளருக்குச் சாசுவதமான அங்கஹீனம் முதலிய கெடுதிகள் ஏற்பட்டிருந்தால், நஷ்டஈடு எவ்வளவென்றும், தற்காலிகமான கெடுதி ஏற்பட்டிருந்தால் நஷ்டஈடு எவ்வளவு என்றும் அச்சட்டத்திலேயே சில அட்டவணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இறந்த தொழிலாளருடைய கூலி அல்லது சம்பளத்திற்கு ஏற்றவாறு நஷ்ட ஈட்டுத் தொகையும் கூடுதல் குறைச்சலாக இருக்கும். தொழிலாளர் இறந்து

187727

போய் விட்டால், நஷ்டஈட்டுத் தொகையானது இறந்தவரை ஜீவனத்திற்கு நம்பி இருந்த சில உறவினர்களுக்குள் பிரித்துக் கொடுக்கப் படவேண்டுமென்று அச்சட்டத்தில் இருக்கிறது. இவர்கள் யார் யார் என்றும் அச்சட்டத்திலேயே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இறந்தவருடைய மனைவி, மைனர் மகன், கலியாணமாகாத பெண், விதவைத் தாய் இவர்களும், இறந்த தொழிலாளருடைய ஊதியத்தை முற்றிலுமோ ஒருபாகமோ நம்பி இருக்கும் தகப்பன், மகன், மைனர் சகோதரர்கள், கலியாணமாகாத அல்லது விதவையான சகோதரி முதலிய இன்னும் சிலர்களும் தான் நஷ்ட ஈடு பெற்றுக் கொள்ளப் பாத்திய முள்ளவர்கள்.

பிரஸ்தாப வழக்கில் ஏற்பட்ட பிரச்னை என்ன வென்றால், இறந்த தொழிலாளருக்குத் தகப்பன் இருந்தார். ஆனால் அத்தகப்பனானவர் இறந்தவருடைய கூலி அல்லது சம்பளத்தை நம்பி இருந்தவரா (Dependent) என்ற பிரச்னை எழுந்தது. ஏனென்றால் அப்படி நம்பி இருக்கும் தகப்பனுக்குத்தான் நஷ்டஈடு கொடுக்கப் படும். இவ்வழக்கில் இறந்தவரும் தினசரி எட்டணாத்தான் சம்பாதித்து வந்தார். தகப்பனும் எட்டணாத்தான் சம்பாதிக்கச் சக்தி உள்ளவர். ஆகையால் மகனுடைய சம்பாத்தியத்தையும் சேர்த்தேதான் தகப்பன் தன்னுடைய ஏழைக் குடித்தனத்தை நடத்துவது சாத்தியமாக இருந்தது. அம்மகன் இறந்ததால் அதற்காக அவர் நஷ்டஈடு அடைய உரிமை உள்ளவர் தான் என்று ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் ரிபோர்ட் செய்தார். இதைத் தொழிலாளர் நஷ்டஈட்டுக் கமிஷனர் ஏற்றுக்கொண்டு கண்ட்ராக்டர் ரூ. 550 இறந்த தொழிலாளருடைய [illegible]க்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார். கமிஷனருடைய தீர்ப்பின் பேரில் சட்டப் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட வரையில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. கண்ட்ராக்டர் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். தம்முடைய ஜீவனத்துக்கே போதுமான ஊதியம் சம்பாதிக்காத ஒரு தொழிலாளர் இறந்து போய் விட்டால், இறந்தவருடைய சம்பாத்தியத்தைத் தகப்பன் நம்பி இருந்ததாக ஏற்படாது—என்று கண்ட்ராக்டருக்காக வாதாடப்பட்டது. இதை உயர் நீதிபதி மாக் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்பிரச்னையை வேறு விதமாகப் பார்க்க வேண்டுமென்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். அதாவது, குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை தகப்பனுடையது. அக்கடமையைச் செலுத்துவதில் தகப்பனானவர் தாம் சம்பாதிக்கும் கூலி மட்டுமல்ல, மகன் கொண்டு வந்த சம்பாத்தியமானது எவ்வளவு கொஞ்சமாக இருந்தாலும் அதையும் உபயோகித்தேதான் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். மகன் இறந்ததால் தகப்பன் அவ்வுதவியை இழந்து விட்டார். ஆகையால் அவர் நஷ்டஈடு அடைய உரிமை உள்ளவர்தான் என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, கமிஷனருடைய தீர்ப்பை உறுதி செய்து கண்ட்ராக்டர் செய்த அப்பீலைத் தள்ளித் தீர்ப்பளித்தனர்.

ஆறு நபர்கள் கூட்டாளிகளாகச் சேர்ந்து, பத்து வருடங்கள் ஒருசினிமா நடத்துவதாக ஒப்புக்கொண்டனர். அக்கூட்டைக் கலைத்துவிட வேண்டுமென்று ஒரு வருடத்திற்குள் கூட்டாளி ஒருவர் தாவா செய்தார். கூட்டைக் கலைக்கச் சட்டம் இடங்கொடுக்குமா?

[ஆதாரம்:- 1953(2) மதராஸ் லா ஜர்னல் 396.]

வியாபாரம் அல்லது தொழில் நடத்தப் பல முறைகள் இருக்கின்றன. ஒருவர் தன்னந் தனியாகவே ஒரு வியாபாரம் அல்லது தொழிலை நடத்தலாம். பிரிபடாத இந்துக் குடும்பமே ஒரு தொழிலை நடத்தலாம். பல நபர்கள் ஒரு கம்பெனியாகச் சேர்ந்தும் நடத்தலாம். அல்லது சில நபர்கள் கூட்டாளிகளாகச் சேர்ந்தும் ஒரு தொழில் அல்லது வியாபாரத்தை நடத்தலாம். ஒவ்வொரு முறைக்கும் தனித் தனிச் சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

கூட்டு வியாபாரம் அல்லது தொழில் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியக் கூட்டு வியாபாரச் சட்டம் (Indian Partnership Act—*1932*) என்ற ஒரு மத்தியச் சட்டம் இருக்கின்றது. இச்சட்டத்தின் இரண்டு ஷரத்துக்களைப் பற்றி இவ்வழக்கில் விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆறு நபர்கள் சேர்ந்து *24-1-1948*-ல் ஒரு 'கூட்டு' ஏற்படுத்திக் கொண்டனர். அன்று கூட்டுப் பத்திரம் (Partnership deed) ஒன்றும் எழுதிக் கொண்டனர். ஒரு இடத்தை வாடகைக்கு வாங்கி, அங்கே ஒரு சினிமா கொட்டகை அமைத்து, சினிமாத் தொழில் நடத்தவே இக்கூட்டு ஏற்பட்டது. ஒவ்வொருவருக்கும் பங்கு எவ்வளவு என்று அப்பத்திரத்திலேயே குறிப்பிட்டுக் கொண்டனர். ஒருவருக்கு *4* அணு பங்கு, மற்றொருவருக்கும் *4* அணு பங்கு, இருவர்களுக்குச் சேர்ந்து *4* அணு பங்கு, ஒருவருக்கு *3* அணு பங்கு. ஆறும் நபருக்கு *1* அணு பங்கு. இக்கூட்டுத் தொழிலானது *10* வருடங்கள் நடத்தப்படவேண்டுமென்று ஒரு ஷரத்து. இதற்கிடையில் எந்தக் கூட்டாளியாவது இச்சினிமாவில் தொடர்ந்து கூட்டாளியாக இருக்க இஷ்டப்படாவிட்டால், அவர் தம்முடைய பங்கை மற்றக் கூட்டாளிகள் எல்லோருக்குமோ, சிலருக்கோ அல்லது ஒரு கூட்டாளிக்கோ விற்று, தாம் போட்டிருக்கும் முதல் தொகையைப் பெற்றுக் கொள்ளலாமே ஒழிய, அவர் தம்முடைய பங்கை வேறு ஒருவருக்கும் மாற்ற முடியாதென்றும் ஒரு ஷரத்து எழுதிக் கொண்டனர். கூட்டாளிகளில் ஒருவர் நிர்வாகக் கூட்டாளியாக (Managing Partner) நியமிக்கப்பட்டார். அவர்தான் சினிமாக் கொட்டகையை அமைத்துச் சினிமாவை நடத்தவேண்டுமென்றும் ஒரு ஷரத்தில் கூட்டாளிகள் ஒப்புக் கொண்டனர்.

இப்படி இருக்கும்போது, சினிமாக் கட்டடமே பூர்த்தியாகாமல் இருந்த நிலைமையில், *10-1-1949*ல், அதாவது கூட்டுப் பாத்திரம் ஏற்பட்டு ஒருவருடம் கூட முடியாமல் இருக்கையில், ஒரு கூட்டாளியானவர் இக்கூட்டைக் கலைத்துவிட வேண்டுமென்று மற்றக் கூட்டாளிகள் மீது கோர்ட்டில் தாவா செய்தார். ஏன் கூட்டைக் கலைக்க வேண்டுமென்ற காரணங்களையும் பிராதில் அவர் குறிப்பிட்டிருந்தார். அதாவது கூட்டுப் பத்திரத்தில் கண்ட ஷரத்துக்கு விரோதமாக நிர்வாகக் கூட்டாளியானவர் தம் கை வசம் ரூ. 200க்கு மேல் வைத்துக்கொண்டிருக்கிருர் என்றும், கூட்டுப் பத்திரம் எழுதிக் கொண்ட பிறகு கூட்டாளிகள் கலந்து யோசிக்க யாதொரு 'மீட்டிங்'கும் கூட்டப்படவில்லை என்றும், தாம் எவ்வளவோ முறை கேட்டும் நிர்வாகக் கூட்டாளியானவர் கூட்டுக் கணக்குகளைத் தம்மிடம் காண்பிக்க மறுத்துவிட்டார் என்றும், மேலும் சினிமாவைத் தாங்களே நேரில் நடத்துவதா அல்லது வேறு ஒருவருக்குக் குத்தகைக்கு விடுவதா என்று கூடக் கூட்டாளிகள் யாதொரு முடிவுக்கும் வரவில்லை என்றும், இக்காரணங்களால் அக்கூட்டையே கலைத்து விடவேண்டுமென்றும் வாதி தம்முடைய தாவாவில் கேட்டிருந்தார். பிரதிவாதிகள் இத்தாவாவுக்குப் பல ஆட்சேபனைகள் செய்தனர். முக்கியமாக, வாதிக்குக் கூட்டாளியாக இருக்கப் பிடிக்காவிட்டால் அவர் கூட்டுப் பத்திரத்தில் கண்டபடி தம்முடைய வீதத்தை விற்றுவிட்டு வெளியே போய் விடலாமே ஒழிய பத்து வருடங்களுக்குள் கூட்டைக் கலைக்க வேண்டுமென்று அவர் தாவா செய்யக் கூட்டுச் சட்டம் இடங்கொடுக்காதென்றும் கட்சி ஆடினர்.

பிரதிவாதிகள் ஏக ஊழல்கள் செய்திருப்பதாக, சப்ஜட்ஜ் முடிவுக்கு வந்து இக்கூட்டைக் கலைத்து விடும்படி தீர்ப்புச் செய்தார். அதன்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு ஏற்பட்ட அத்தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது. பிரதிவாதிகள் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் கொடுத்தனர். ஹைகோர்ட்டிலும் இக்கூட்டைக் கலைத்துவிடச் சட்டம் இடங்கொடுக்குமென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

கூட்டு வியாபாரக் சட்டத்தின் செக்ஷன் *11*-ல் இருப்பது என்னவென்ருல் "இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டு" கூட்டாளிகள் தங்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் தங்களுக்குள் ஒப்பந்

தம் செய்துகொள்ளுவதன் மூலம் நிர்ண யம் செய்து கொள்ளலாம்—என்று இருக் கிறது.

அச்சட்டத்தின் செக்ஷன் 44 என்பது கூட்டைக் கலைப்பதுபற்றி, கீழே கண்ட காரணங்களினால் கூட்டைக் கலைத்துவிட வேண்டுமென்று எந்தக் கூட்டாளியும் கோர்ட்டில் தாவா செய்யலாமென்றும், கூட்டைக் கலைத்துவிடக் கோர்ட்டுக்கு அதிகார முண்டென்றும் அதில் இருக் கிறது. கூட்டைக் கலைப்பதற்கான கார ணங்களாவன:—(1) எந்தக் கூட்டாளிக் குப் பைத்தியம் பிடித்து விட்டாலும் (2) இனி எக்காரணத்தைக் கொண்டோ எந்தக் கூட்டாளியும் தம்முடைய கடமை களைச் செய்ய முடியாதென்ற நிலைமை ஏற் பட்டாலும் (3) கூட்டுத் தொழில் சரிவர நடப்பதைப் பாதிக்கும்படி எந்தக் கூட் டாளி நடந்து கொண்டாலும் (4) எந்தக் கூட்டாளியானவர் வேண்டுமென்று கூட்டு நிர்வாகத்தைப் பற்றிய ஒப்பந்தங்களுக்கு முரணாகவே நடந்து வந்தாலும் அல்லது மற்றக் கூட்டாளிகள் அவருடன் நியாய மாக ஒத்துழைத்துக் கூட்டை நடத்துவது சாத்தியமாகாதபடி கூட்டாளி நடந்து கொண்டாலும்; (5) எந்தக் கூட்டாளி யானவர் தம்முடைய பங்கை மூன்றாம் மனிதர்களுக்கு மாற்றிவிட்டாலும், கோர்ட் ஜப்தியாகும்படி விட்டுவிட்டா லும் அல்லது ஏலம் போகும்படி விட்டு விட்டாலும் (6) கூட்டுத் தொழிலை நடத் தினால் நஷ்டத்தில்தான் நடத்தவேண்டு மென்று ஏற்பட்டாலும் (7) கூட்டைக் கலைத்துவிட வேறு நியாயமான காரணங் கள் இருந்தாலும்—அக்கூட்டைக் கலைத்து விடக் கூட்டாளி எவரும் தாவா செய்ய லாம்—என்று செக்ஷன் 44ல் இருக்கின் றது. இந்த ஷரத்தை அனுசரித்துத் தான் பிரஸ்தாப வழக்கில் ஒரு கூட்டாளி யானவர் கூட்டைக் கலைத்துவிடத் தாவா செய்திருந்தார். கூட்டாளிகள் செக்ஷன் 11இன்படி செய்துகொண்ட கூட்டுப் பத் திரத்தில் இக்கூட்டைப் பத்து வருடங் களுக்குள் கலைக்காமல் நடத்தவேண்டு மென்று கூட்டாளிகள் ஒப்பந்தம்செய்து கொண்டிருந்தாலும், இந்த ஒப்பந்த மானது கூட்டுச் சட்டத்தின் மற்ற ஷரத் துக்களுக்குட்பட்டதே என்று செக்ஷன் 11லேயே குறிப்பிடப்பட் டிருக்கிறது. மற்ற ஷரத்துக்களில் ஒன்றான செக்ஷன் 44ல் எந்த எந்தக் காரணங்கள் இருந்தால் கூட்டைக் கலைத்துவிடக் கூட்டாளி எவ ரும் தாவா செய்யலாமென்று இருப்ப தால், அதற்கு முரணாகச் செய்துகொள் ளும் ஒப்பந்தங்கள் செல்லமாட்டாவென உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட் டனர். அதாவது கூட்டு ஏற்பட்டு, பத்து வருடங்கள் வரை அதைக் கலைக்கக் கூடா தென்று கூட்டாளிகள் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும், செக்ஷன் 44ல் கண்ட காரணங்கள் இருப்பதால், பத்து வருடத்திற்கு முன்பாகவே இக்கூட்டைக் கலைத்துவிடக் கூட்டுச் சட்டம் இடங் கொடுக்கிறதென உயர்நீதிபதி அவர்கள் இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர்.

பிரஸ்தாப வழக்கில் கூட்டைக் கலைத் துச் சினிமாக் கொட்டகையை ரிசீவர் ஏலம் போடும்படி செய்த கீழ்க் கோர்ட் தீர்ப்பு ஹைகோர்ட்டில் உறுதி செய்யப் பட்டது.

READY! 1954 READY!!

ஸ்ரீவித்யா டைரிகள்

பப்ளிஷர்ஸ்: ஸ்ரீ வித்யா பப்ளிஷிங் ஹவுஸ், கும்பகோணம்.

சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

[சென்ற மாத இதழில் பஞ்சாயத்துத் தலைவர் மீதும் மெம்பர்கள் மீதும் நிர்வாக அதிகாரி மீதும் சிவில், கிரிமினல் நடவடிக்கைகள் தொடருவது பற்றிய ஷரத்துக்களும் அது சம்பந்தமான காலாவதி கெடுக்களும் விளக்கப்பட்டன. இச்சட்டத்தில் கண்டிருக்கும் ஷரத்துக்கள் தவிர, பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாகப் பல விதிகள் உப விதிகள் முதலியவை இருக்கின்றன. இவைகளை யார் ஏற்படுத்துவது என்பதைக் கவனிப்போம்.]

விதிகள் இயற்றச் சர்க்காருக்கு அதிகாரம்

(1) இச்சட்ட ஷரத்துக்களிலேயே சில வற்றில் எந்த எந்த விஷயங்களைப்பற்றிச் சர்க்கார் விதிகள் இயற்றலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன.
செக்ஷன் 112
அது தவிர, இச்சட்டத்தின் நோக்கங்களைப் பொதுவாக நிறைவேற்றுவதற்காகத் தேவையான விதிகளை இயற்றவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. (இந்த அதிகாரத்தை உபயோகித்து, சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முக்கிய விதிகள் அந்தந்த விஷயங்களை விளக்கும் போது "வக்கீல்" பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.)

(2) மேற்கண்ட பொதுவான அதிகாரத்திற்குக் குந்தகமின்றி, குறிப்பாக 42 விஷயங்களைப் பற்றி விதிகள் இயற்றவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. (இந்த அதிகாரத்தை உபயோகித்தும் சர்க்காரால் விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன.)

விதிகளாலும் அபராதம் விதிக்கப் படலாம்.

சர்க்கார் விதிகள் ஏற்படுத்தும் போது, அவ்விதிகளை மீறினல் அபராதம் செலுத்தப் பட வேண்டுமென்றும் விதிகளாலேயே தண்டனையும்
செக்ஷன் 113
விதிக்கலாம். அபராதம் ரூ. 100-க்கு மேற்படாமலிருக்க வேண்டும். முதல் தண்டனைக்குப் பிறகு தொடர்ந்து செய்யப்படும் மீறுதல்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 15-க்கு அதிகப்படாத அபராதம் விதிக்கலாம்.

விதிகள் பிரசுரம் செய்யப்பட்ட தேதி முதல் தான் அமுலுக்கு வரும்

சர்க்காரால் ஏற்படுத்தப்படும் விதிகள் எல்லாம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படவேண்டும். அப்படிப் பிரசுரம் செய்யப்பட்டவுடன் அவ்விதிகள் இச்சட்ட ஷரத்துக்கள் போலவே பாவிக்கப் படும்.

பஞ்சாயத்தே உபவிதிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இச்சட்ட ஷரத்துக்களுக்கும், வேறு சட்டங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு, இன்ஸ்பெக்டரின் முன் அனுமதி பெற்று, பஞ்சாயத்து
செக்ஷன் 114
அமைக்கப்பட்டிருக்கும் எந்தக் காரியங்களையும் நடத்துவதற்கான உபவிதிகளை அந்தந்தப் பஞ்சாயத்தே ஏற்படுத்திக் கொள்ளலாம். இவ்விதம் பஞ்சாயத்து இயற்றிக் கொள்ளும் உபவிதிகளிலேயே, அவைகளை மீறினல் அதற்கான அபராத தண்டனைகளையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அபராத தண்டனை

ஒ. 15க்கு மேற்படாமலும், முதல் தண்டனைக்குப்பின் தொடர்ந்து செய்யப்படும் மீறுதல்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5க்கு மேற்படாமலும் அபராதம் விதிக்கப்படலாம்.

ஒரு பஞ்சாயத்தானது எவ்விதம் உபவிதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், அவைகளை எப்படிப் பிரசுரம் செய்ய வேண்டும், அவை எந்தத் தேதி முதல் அமுலுக்கு வரும் என்ற விஷயங்களைப் பற்றி விதிகள் செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

விதிகள்—அட்டவணை

பஞ்சாயத்துச் சட்டத்தில் பற்பல ஷரத்துக்களால் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை உபயோகித்து சர்க்காரால் விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன. இவ்விதிகள் எந்த விஷயத்தைப் பற்றி என்பதையும் விதிகள் எந்தத் தேதியுள்ள சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருக்கின்றன என்பதையும் சுலபமாகக் கண்டு பிடிப்பதற்காக அவற்றைக் கீழே கண்ட அட்டவணையில் கோத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன்.	விஷயம்	சர்க்கார் கெஜட் தேதி (வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலொழிய, கெஜட் பாகம் IA ரூல் சப்ளிமெண்டின் தேதி தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.)
6 (1)	பஞ்சாயத்தில் எவ்வளவு ஜனத்தொகை இருந்தால் மெம்பர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று நிர்ணயிப்பது.	27—3—1950. அறிக்கை 1.
8 (1)	ஷை ஷெடியூல் வகுப்பினருக்கு ஸ்தானம் ஒதுக்குவது.	ஷை அறிக்கை 2.
11 (2)	இரண்டு தடவை தேர்தல் வைத்தும் யாதொரு மெம்பரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் பஞ்சாயத்தே ஒரு மெம்பரைத் தேர்ந்தெடுப்பது பற்றி.	ஷை அறிக்கை 3.
15 112 (1)	தேர்தல் ரகசியங்களை வெளியிடுவது பற்றித் தண்டனை.	ஷை அறிக்கை 4.
16 (2) (c) 17 (d) 112 (1)	பஞ்சாயத்துடன் சில ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருந்தாலும் மெம்பர் பதவி போகாது.	ஷை அறிக்கை 5.
19 (1)	ஒரு மெம்பருக்கு யோக்கியதாம்சங்கள் இருக்கின்றனவா என்று தீர்மானம் செய்யும் அதிகாரி.	ஷை அறிக்கை 6.
25 (2) (3) (4) (5)	பஞ்சாயத்துத் தலைவருடைய அலுவல்களை வேறு ஒருவர் செய்வது பற்றியது.	ஷை அறிக்கை 7.
26 (2) 112 (2) iii	பஞ்சாயத்து மெம்பர்கள் கேள்வி கேட்பது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 8.
33	நிர்வாக உத்தியோகஸ்தர் லீவில் இருக்கும்போது தம் வேலையைப் பார்க்க வேறு ஒருவரை நியமிப்பது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 9.
34 (2) 112 (1)	பஞ்சாயத்தின் நிர்வாகத்திலுள்ள காரியாலயங்களுக்கு விடுமுறை நாட்கள்.	ஷை அறிக்கை 10.
34 (3)	இரண்டு அல்லது அதிகமான பஞ்சாயத்துக்களுக்குப் பொதுவான உத்தியோகஸ்தர்களை நியமிப்பது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 11.
37	பஞ்சாயத்து கேட்கும் தஸ்தவேஜுகளை நிர்வாக அதிகாரி தாகல் செய்வது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 12.

38	பஞ்சாயத்தும், கமிட்டிகளும் எப்படி நடவடிக்கைகள் நடத்தவேண்டுமென்பது பற்றிய விதிகள்.	அறிக்கை 13.
39 (2)	பல பஞ்சாயத்துக்கள் ஒரு பொதுக் கமிட்டி அமைத்துக் கொள்ளுவது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 14.
44	அவசரகாலங்களில் கலெக்டர் அதிகாரம் செலுத்துவதற்கான நிபந்தனைகள்.	ஷை அறிக்கை 15.
59 (1)	குடிமராமத்து வேலைகளைச் சர்க்கார் பஞ்சாயத்துக்கு மாற்றுவது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 16.
64 (1) (3) 112 (1)	வீட்டு வரி—விகிதங்கள் வரி விலக்குகள்—பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 17.
64 (4) 112 (1)	சில வகைக் கட்டடங்களுக்கு வீட்டு வரி விலக்கு. வாடகை அல்லது கிரயமதிப்பு எப்படிப் போடுவது. வீடுகள் பராதீனம் செய்யப்பட்டால்.	ஷை அறிக்கை 18.
65 (1) (2)	தொழில் வரி—விகிதங்கள்.	ஷை அறிக்கை 19.
66	வண்டி வரி—விகிதங்கள்—விதி விலக்குகள்.	ஷை அறிக்கை 20.
68	வரிகள் கட்டணங்கள்—வஜா செய்வது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 21.
69	வரிகளைக் கிராமப் பெரிய தனக்காரர் வசூல் செய்வது பற்றி.	ஷை அறிக்கை 22.
70 (1) 72 (1) 112 (1)	பஞ்சாயத்து நிதிகளைக் குறிப்பிட்ட வேலைகளுக்கு ஒதுக்குவது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 23.
81 (1) 112 (1)	சொந்த மார்க்கெட்காரர்கள் எந்த எந்தச் செலவுகளைக் கழித்துக்கொண்டு பாக்கி இருக்கும் வருமானத்தைக் கல்வி, தர்மம், மதம் இந்த விஷயங்களுக்காகச் செலவு செய்தால் விதி விலக்கு உண்டு என்பது பற்றி.	ஷை அறிக்கை 24.
87 112 (2) xviii	பொது மக்கள் தங்குமிடம்—வண்டிகள் தங்குமிடம் பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 25.
91	லைசென்சு தேவையுள்ள கைத்தொழில்களும் தொழிற்சாலைகளும்.	ஷை அறிக்கை 26.
92 (b) 112 (1)	சில வகை யந்திரங்கள்—பர்மிட் தேவையில்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டவை.	ஷை அறிக்கை 27.
95 (1)	கட்டடங்களுக்கு நம்பர் போடவேண்டிய அதிகாரி.	ஷை அறிக்கை 28.
96 112 (1) (2) (vi) (x) ixi)	பஞ்சாயத்தின் வருமானங்களும் செலவுகளும்—கணக்குகள் விபரம்.	ஷை அறிக்கை 29.
96 (3)	லைசென்சு அல்லது பர்மிட் கேட்கும் மனுவின் பேரில் எத்தனை நாட்களுக்குள் உத்தரவு செய்யப்படவேண்டும் என்பது பற்றி.	ஷை அறிக்கை 30.
101 (1)	கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து எந்த விஷயங்களைப் பற்றிப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி தகவல் கேட்கலாம்.	ஷை அறிக்கை 31.
104	எந்தக் குற்றங்களை ராஜிசெய்து கொள்ளலாம்.	ஷை அறிக்கை 32.
112 (1)	பஞ்சாயத்துத் தலைவர், உபதலைவர், மெம்பர்கள் முதலியவர்களுடைய பிரயாணப்படி.	ஷை அறிக்கை 33.
112 (1)	பஞ்சாயத்தின் உபதலைவர் தேர்தல் விதிகள்.	ஷை அறிக்கை 34.
112 (2) (ii)	தலைவர், உபதலைவர், மெம்பர்கள் எப்படி ராஜிநாமா செய்யலாம்.	ஷை அறிக்கை 35.

27—3—1950.

112 (2) (iv)	கமிட்டிகள் அமைப்பது, வெளி நபர்களை அதில் சேர்த்துக் கொள்ளுவது, கமிட்டிக்கு அதிகாரம் கொடுப்பது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 36.
112 (2) vi	பஞ்சாயத்தின் பணங்களை எங்கே போட்டு வைப்பது, எப்படி எடுத்துக் கொள்ளுவது என்பது பற்றி.	ஷை அறிக்கை 37.
112 (2) xi xii	தணிக்கையில் ஏற்றுக் கொள்ளப்படாத செலவு இவைகளுக்கு, 'சர்சார்ஜ்'—ஆடிட்டர்களின் அதிகாரங்கள்.	ஷை அறிக்கை 38 திருத்தம் 4-3-1953.
112 (2) xii	இன்ஸ்பெக்டர்கள், சோதனை அதிகாரிகள் இவர்களின் அதிகாரம்.	ஷை அறிக்கை 39.
112 (2) xix	லைசென்சு—பர்மிட் இவைகளின் நமூனா.	ஷை அறிக்கை 40.
112 (2) xx	பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு எவரையும் சம்மன் செய்யும் அதிகாரம்.	ஷை அறிக்கை 41.
112 (2) xxi	நிர்வாக அதிகாரியும் பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களும் ரப்பர் ஸ்டாம்பு கையெழுத்து உபயோகிப்பது பற்றி.	ஷை அறிக்கை 42.
112 (2) xxii	பஞ்சாயத்து நடவடிக்கைகளுக்கும் தஸ்தாவேஜுகளுக்கும் நகல் வாங்குவது பற்றி.	ஷை அறிக்கை 43.
112 (2) xxiv	பொது அல்லது சொந்தக் குளம் கிணறு முதலியவற்றை உபயோகிப்பது பற்றி.	ஷை அறிக்கை 44.
112 (2) xxii	சொந்தக் கக்கூசுகளைச் சுத்தம் செய்வது பற்றி.	ஷை அறிக்கை 45.
112 (2) xxvi	மயானம், புதைக்குமிடம் ஏற்படுத்துவது பற்றி.	ஷை அறிக்கை 46.
112 (2) xxxii	பொது அல்லது சொந்த மார்க்கெட்டுகளைப் பற்றிப் பஞ்சாயத்து, நிர்வாக அதிகாரி இவர்களின் அதிகாரங்கள்.	ஷை அறிக்கை 47.
112 (2) xxxvi	அப்பீல்கள் செய்யக் கெடு.	ஷை அறிக்கை 48.
112 (2) xiii	கோட்டிசுகளைப் பிரசுரம் செய்யும் முறை.	ஷை அறிக்கை 49 (திருத்தம்-1-4-1952)
116 (3)	பஞ்சாயத்துத் தலைவருடைய பதவிக் காலம் முடிந்த பிறகு அவரிடமிருந்து சொத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய அதிகாரி.	ஷை அறிக்கை 50.
133 (b) 112 (1)	எந்தத் தஸ்தவேஜுகளைப் பஞ்சாயத்தே ரிஜிஸ்டர் செய்யும்படி சப்ரிஜிஸ்ட்ராருடைய அதிகாரத்தை அளிக்கலாம் என்பது பற்றி.	ஷை அறிக்கை 51.
2 (6)	தேர்தல் அதிகாரி யார்?	5-6-1951-அறிக்கை 1.
28 (5) (b)	சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாத நிர்வாக உத்தியோகஸ்தருக்குப் பஞ்சாயத்துக் கொடுக்க வேண்டிய கட்டணம்.	ஷை அறிக்கை 2.
34 (2) (6)	பஞ்சாயத்து அதிகாரிகள்—ஊழியர்கள் சொந்த நடத்தை பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 3.
34 (2) 112 (1)	பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுப்பது பற்றி.	ஷை அறிக்கை 4.
52, 112 (1)	பல பஞ்சாயத்துக்கள் சேர்ந்து நடத்தக்கூடிய ஸ்தாபனங்களின் ஜாப்தா.	ஷை அறிக்கை 5.
63 (3) 112 (1)	வியாபார விளைபொருள் மீது கட்டண விதிப்பு.	ஷை அறிக்கை 6.
99 (1) 112 (1)	நிர்வாக அதிகாரி சோதனை செய்வதற்கான நிபந்தனைகள்.	ஷை அறிக்கை 7.
112 (2) i	தேர்தல் தகராறுகளை விசாரித்து முடிவு செய்வது பற்றிய விதிகள்.	ஷை அறிக்கை 8.
112 (2) x	ஆடிட்டர் ரிபோர்ட்.	ஷை அறிக்கை 9.

112 (2) xv-xviii	வரி விதிப்பு— அப்பீல்—வசூல் முதலியவை பற்றிய விதிகள்.	5—6—1951. அறிக்கை 10.
7, 10 (3) (a) 112 (2) i	பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்தல் விதிகள்.	21-8-1951 அறிக்கை 1, திருத்தம்-17-9-1952 திருத்தம்-6-5-. 953.
50 112 (1)	சில விஷயங்களுக்குப் பஞ்சாயத்து செலவு செய்ய வேண்டியது பற்றி.	21-8-1951 அறிக்கை 2.
59 (2) 69, 112 (1) (2) xviii	குடிமராமத்து விதிகள்.	21-8-1951 அறிக்கை 3.
73 (2) 112 (1) (2) vii-viii	வரவு செலவு திட்டம்.	21-8-1951 அறிக்கை 4.
112 (1)	அனுமதி இல்லாமல் பஞ்சாயத்து செலவு செய்யக் கூடிய கோர்ட் செலவுகள்.	21-8-1951 அறிக்கை 5.
112 (1) (2) i	பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் விதிகள்.	21-8-1951 அறிக்கை 6. திருந்தம்-17-9-1952 திருத்தம்-6-5-1953.
112 (1) (2) xiii	குத்தகைதார்களுக்கும் கண்ட்ராக்டர்களுக்கும் வஜா செய்வது பற்றிய விதிகள்.	21-8-1951 அறிக்கை 7.
112 (2) xxx	பொது ரஸ்தாக்களிலும் பஞ்சாயத்தின் சொத்துக் களிலும் இருக்கும் மரங்களின் பாத்தியத்தை நிர்ணயம் செய்வது பற்றி.	21-8-1951 அறிக்கை 8.
112 (2) xli	சொந்த மார்கெட்டுகள் வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகள்—தணிக்கை—சோதனை—விதிகள்.	21-8-1951 அறிக்கை 9.
114 (1) (3)	பஞ்சாயத்துக்கள் உப விதிகள் செய்துகொள்ளுவது பற்றிய விதிகள்.	21-8-1951 அறிக்கை 10
12 (3) (5) 12A	வாக்காளர் ஜாப்தாவைப் பிரசுரம் செய்யவேண்டிய அதிகாரி.	8-4-1952 அறிக்கை 1.
34 (1)	நிர்வாக அதிகாரி தாற்காலிக நியமனங்கள் செய்ய விதிகள்.	8-4-1952 அறிக்கை 2.
34 (2)	பஞ்சாயத்தில் சுகாதார உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது பற்றி.	8-4-1952 அறிக்கை 3.
ஷை	பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களுக்கான யோக்கிய தாம்சங்கள்.	8-4-1952 அறிக்கை 4.
40 (1) 112 (1) (2) viii	பஞ்சாயத்தின் நிர்வாக அறிக்கை தயார் செய்து அனுப்புவது பற்றிய விதிகள்.	8-4-1952 அறிக்கை 5.
53 (2)	பஞ்சாயத்தின் நிர்வாகத்திலிருந்து காடுகளை எடுத்து விடுவது பற்றி.	8-4-1952 அறிக்கை 6.
60 (2) (4) (5)	புறம்போக்குகளை உபயோகிப்பது பற்றிய நிபந்தனை கள்.	8-4-1952 அறிக்கை 7.
61	எஸ்டேட்டுக்களிலுள்ள புறம்போக்கு நிலங்களைப் பற்றிப் பஞ்சாயத்தின் அதிகாரம்.	8-4-1952 அறிக்கை 8,
63 (3) 112 (1)	பஞ்சாயத்து நில செஸ் விதிப்பது பற்றி.	8-4-1952 அறிக்கை 9
63 (3) 112 (1)	விவசாய நிலங்களின் மீது வரி விதிப்பது பற்றி.	8-4-1952 அறிக்கை 10.
67 (3)	சொத்துப் பராதீனங்களைப் பற்றிய தீர்வை விதிப்பது.	8-4-1952 அறிக்கை 11.

90	'ஸ்லாட்டர் ஹவுஸ்'களைப் பற்றி.	8-4-1952	அறிக்கை 12.
96 (2) 112 (1)	விசையால் ஓடும் யந்திரங்களுக்கு லைசென்சு உச்சக்கட்டண நிர்ணயம்.	8-4-1952	அறிக்கை 13.
112 (2) xiv	பஞ்சாயத்து வேலைகளுக்கு 'டெண்டர்' வாங்குவது பற்றிய விதிகள்.	8-4-1952	அறிக்கை 14.
51 112 (1)	ரேடியோசெட் வைத்துக் கொள்ளுவது பற்றி.	4-2-1953	அறிக்கை 1.
79 112 (1) (2) xiii xxix xxxi	பொது ரோடுகளில் ஆக்கிரமிப்புக்களை அகற்றுவது பற்றிய விதிகள்.	4-2-1953	அறிக்கை 2.
112 (1)	வக்கீல் நியமித்துக் கொள்ளுவது.	4-2-1953	அறிக்கை 3.
112 (2) xiii	ஸ்தாவரசொத்து வாங்குவதும் பராதீனம் செய்வதும் பற்றி.	4-2-1953	அறிக்கை 4.
112 (2) xiv	பஞ்சாயத்துக்குச் சரக்குகள் சப்ளை செய்வது பற்றி.	4-2-1953	அறிக்கை 5.
112 (2) xxxvii	ரோடுகள், சந்தைகள், திருவிழாக்கள் இவைகளைத் தரம் பிரிப்பது பற்றி.	4-2-1953	அறிக்கை 6.

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனு
முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து
நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப்
பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிறங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி,
எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய
தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணு 12.
சிறிய ,, ,, ,, அணு 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை, S. Ry.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

பஞ்சாயத்து எல்லைக்குள் வியாபாரத்திற்காக நெல் மூட்டை அடுக்கி வைக்க லைசென்சுக் கட்டணம்.

191. கேள்வி: (சீனுவாச ரெட்டியார்—வைத்தீசுவரன் கோயில்) பஞ்சாயத்துச் சட்டப்படி பஞ்சாயத்து எல்லைக்குள் நெல் வியாபாரம் செய்யவும் கிடங்குகளில் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கவும் லைசென்சுக் கட்டணம் எவ்வளவு? ஒரு வியாபாரி பல கிடங்குகளில் கொஞ்சம் கொஞ்சமாக மூட்டைகள் வைத்திருந்தால் தனித்தனி லைசென்சு வாங்க வேண்டுமா? கால தாமதமாக லைசென்சு வாங்குவதற்குத் தனிக் கட்டணம் வசூல் செய்யலாமா?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 96 (2)ன்படி லைசென்சு கட்டணங்கள் எவ்வளவு என்று அந்தந்தப் பஞ்சாயத்தே நிர்ணயம் செய்து கொள்ளலாம். ஆனால் எந்த விஷயத்தைப் பற்றியாவது லைசென்சுக் கட்டணம் எவ்வளவு ரூபாய்க்கு மேல் போகக்கூடாதென்று சர்க்காரால் விதிகள் செய்யப்பட்டிருந்தால் அந்த விகிதத்திற்கு மேற்படாமல் பஞ்சாயத்தானது லைசென்சுக் கட்டணத்தை நிர்ணயம் செய்யவேண்டும். விசையால் ஓடும் யந்திரங்களுக்கான லைசென்சுக் கட்டண உச்ச விகிதம் எவ்வளவு என்றுதான் இதுவரை சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. (8—4—1952 தேதி கெஜட் பார்க்கவும்.) வியாபாரத்திற்காக நெல் மூட்டைகள் அடுக்க லைசென்சு வேண்டும். ஆனால் இது சம்பந்தமாக லைசென்சுக் கட்டண உச்ச விகிதத்தைப்பற்றி, சர்க்கார் விதிகள் செய்யவில்லை. நியாயமான லைசென்சுக் கட்டண விகிதத்தை அந்தப் பஞ்சாயத்தே நிர்ணயம் செய்து கொள்ளலாம். லைசென்சு என்பது இடத்தைப் பொறுத்ததாக இருப்பதால் ஒவ்வொரு கிடங்குக்கும் தனித்தனி லைசென்சு வாங்க வேண்டுமென்று வற்புறுத்துவது தவறல்ல. லைசென்சு வாங்காமலிருப்பது குற்றம். ஆனால் இது பஞ்சாயத்துடன் ராஜி செய்து கொள்ளக்கூடிய குற்றம்தான். ராஜி செய்து கொள்ளத் தனிக் கட்டணம் வசூல் செய்வதும் சட்ட விரோதமாகாது.

வேறு ஒருவர் ஆயுள்வரை அனுபவிக்க வேண்டிய சொத்தைப் பாகம் செய்து கொண்டால்?

192. கேள்வி: (P. 709 S. ராமசந்திரன்.) ஒரு இந்து தம்முடைய விதவை மகளுக்குக் குடும்பச் சொத்தில் சில பாகத்தை அவள் ஆயுள்வரை அனுபவித்துக் கொள்ளவேண்டியதென்றும், பிறகு தம் வார்சுகள் அடையவேண்டியதென்றும் கண்டு செட்டில்மெண்டு மூலம் கொடுத்துவிட்டார். அவர் இறந்த பிறகு சொத்துக்களை அடைந்த அவருடைய இரு மகன்கள் சொத்தைப் பாகம் செய்துகொண்டார்கள். தகப்பனால் தங்கள் சகோதரிக்குக்

கொடுத்த சொத்தையும் இவர்கள் பாகம் செய்து கொண்டு சகோதரியின் ஜீவதசைக்குப் பிறகு அவரவர் பாகத்தை அடைய வேண்டுமென்று அதில் ஏற்பாடு செய்து கொண்டார்கள். சகோதரர்களில் மூத்தவர் இறந்துவிட்டார். தம்முடைய எல்லாச் சொத்துக்களையும் தமக்குப் பின் தம்முடைய மனைவியே சர்வ சுதந்தரத்துடன் அடைகிறதென்று உயில் எழுதிவைத்து மூத்தவர் இறந்தார். பிறகுதான் விதவைச் சகோதரி இறந்தாள். விதவைச் சகோதரியிடம் இருந்த சொத்தின் பாகம் மூத்தவரின் மனைவிக்குக் கிடைக்குமா? அல்லது அச் சொத்து பூராவும் இளைய சகோதரருக்கே போய்விடுமா? அவள் அதை இஷ்டப்படி விற்கலாமா?

பதில்: மூத்த சகோதரர் இறந்து விட்டாலும் விதவைச் சகோதரியிடமிருந்த சொத்தின் அவருடைய பாகம் அவருடைய மனைவியைத்தான் சேரும். கணவனுடைய உயில்படி அவள் அதையும் இஷ்டப்படி பாதீனம் செய்யலாம்.

இந்தியாவிலுள்ள இரண்டு ராஜ்யங்களுக்குள் நடக்கும் வியாபாரம்— விற்பனை வரி உண்டா?

193. கேள்வி: (P. 1122 — ராமகிருஷ்ண கவுண்டர்—உடுமலை.) சென்னை ராஜ்யத்திலுள்ள வியாபாரி ஒருவர் கொச்சி திருவனந்தபுரம் ஸ்டேட் வியாபாரிக்கு வெல்லம் கரும்புச் சர்க்கரை முதலிய விற்பனை செய்து, ரயில்வேயில் அனுப்புபவர் (Sender) அனுப்பப்படுபவர் (Consignee) இரண்டும் தம் பெயராலேயே போட்டு அனுப்புகிறார். வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது கொச்சி திருவாங்கூர் ராஜ்யத்தில். சரக்கு சென்னை ராஜ்யத்திலிருந்து ஷை கொச்சி திருவாங்கூர் ராஜ்யத்திற்குப் போய்விடுகிறது. இதற்குச் சென்னை ராஜ்யத்திலுள்ள வியாபாரி விற்பனை வரி கொடுக்கவேண்டுமா?

பதில்: வேண்டாம். இது இந்தியாவிலுள்ள இரண்டு ராஜ்யங்களுக்குள் நடக்கும் வர்த்தகமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் 286 ஆவது ஷரத்தின்படி இவ்வித விற்பனைகளுக்கு விற்பனை வரி விதிக்க முடியாது. இது விஷயமாக 8—5—1953ல் சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். (1953ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம் கோர்ட்—பக்கம் 333 பார்க்கவும்.)

ஒரு சொந்த மார்க்கெட்டுக்குள் ஹோட்டல் நடத்த தனி லைசென்சு வேண்டுமா? -பஞ்சாயத்துச் சட்டம்.

194. கேள்வி: (P. 1123—அப்புதுல்கபூர்—அதிராம்பட்டணம்.) கிராமப் பஞ்சாயத்தில் லைசென்சு பெற்ற ஒரு சொந்த மார்க்கெட்டுக்குள் நடத்தப்படும் பலசரக்குக் கடை, டீ, சாப்பாட்டு ஹோட்டல் முதலியவைகளுக்கு மற்றொரு லைசென்சுக் கட்டணம் கட்டி, லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டுமா?

பதில்: சில வகைத் தொழில் அல்லது வியாபாரம் நடத்தப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 91இன்படி ஒரு பிரத்தியேக லைசென்சு வேண்டும். பலசரக்குக் கடை நடத்தவும் சரி, டீ அல்லது ஹோட்டல் நடத்தவும் சரி லைசென்சு வேண்டும். (27—3—1950 தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A ரூல் சப்ளிமெண்ட் அறிக்கை 26 பார்க்கவும்.) சொந்த மார்க்கெட் நடத்துபவர் வாங்கிக்கொள்ள வேண்டிய லைசென்சில் இது அடங்காது. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

இந்துச் சட்டம். இரண்டு மனைவிகளும், இரண்டு மகன்களும்— ஒரு மனைவியின் பாகம்.

195. கேள்வி: (ஹரிஹரேசன் — கீழ அதங்குடி.) ஒரு இந்துவுக்கு மூத்த மனைவியும், அவளிடம் பிறந்த இரண்டு ஆண் மக்களும் ஒரு பெண் குழந்தையும் உண்டு. அவர் இரண்டாம் தாரம் மணம் செய்து கொண்டார். இரண்டாம் மனைவிக்குச் சந்ததி கிடையாது. இந்து இறக்கும்போது இரண்டாம் மனைவியின் சம்மதம் பெறாமல், ஆனால் அவள் சம்மதித்ததாகக் கண்டு ஒரு உயில் எழுதி, அவள் சில நிலங்களின் மகசூலை மட்டும் தன் ஜீவதசை வரை அனுபவித்துக்கொள்ள வேண்டியதென்று எழுதி இருக்கிறார். இந்து இறந்த பின்பு இளைய மனைவி புருடனுடைய சொத்தில் நாலில் ஒரு பாகம் தன் உயிருள்ள வரையில் அனுபோக பாத்தியம் கிடைக்க வேண்டுமென்று கேட்க உரிமை உண்டா? சொத்து முழுமையும் பூர்வீகச் சொத்துக்கள்.

பதில்: இளைய மனைவி உயிலை ஒத்துக் கொள்ளாவிட்டால், அவளுக்குச் சொத்தில் பாக உரிமை உண்டு. இளைய மனைவிக்கும் மூத்த மனைவிக்கும் சேர்த்து 3ல் 1 பாகம் உண்டு. அதாவது மொத்த சொத்தில் இளைய மனைவிக்கு 6ல் 1 பங்கு அனுபோக பாத்தியம் உண்டு.

பஞ்சாயத்தில் தொழில் வரி.

196. கேள்வி: (கைனர் முகமது — உத்தமபாளையம்) பஞ்சாயத்துப் போர்டில் தொழில் வரி விதிப்பது, வருமானத்திற்கா அல்லது விற்பனைத் தொகைக்கா? எவ்வளவு வருமானத்திற்கு எவ்வளவு வரி விதிக்கலாம்?

பதில்: தொழில் வரி என்பது ஒரு நபருடைய சம்பளம் அல்லது வருமானத்தைப் பொறுத்தது. விற்பனைத் தொகைக்கு அல்ல. எவ்வளவு வருமானம் இருந்தால் தொழில் வரி எவ்வளவுக்குக் குறைவாக இருக்கக் கூடாது, எவ்வளவுக்கு மேல் இருக்கக் கூடாதென்று விதிகள் இருக்கின்றன. (27—3—1950 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I A அறிக்கை 19 பார்க்கவும்) அந்த விகிதங்களுக்குள் அந்தந்தப் பஞ்சாயத்தானது தொழில் வரி விகிதங்களை நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும்.

விற்பனை வரி

197. கேள்வி: (திருமலைசாமி — தளவாய் பட்டணம்.) ஒரு மில் ஜவுளி வியாபாரி 1951-52 'டர்ன்ஓவர்' ரூ. 10,000க்கு மேல் இருந்தபடியால் அதற்குரிய வரியைக் கட்டிவிட்ட பிறகு 1952—53க்கும் மாதா மாதம் ரூ. 13—0—0 வீதம் கட்டி வந்தார். ஆனால் 1952—53 வருடத்தில் வியாபாரம் ரூ. 3000 ஆக இருந்தால், வியாபாரி கட்டிய ரூபாயில் வரி போக மீதி வாபீஸ் கிடைக்குமா? அல்லது விற்பனை வரி அதிகாரி தமது உத்தேசமாய் ரூ. 10,000 என்று மதித்து வரி விதிக்கலாமா?

பதில்: உண்மையில் 1952—53 வருடத்தில் வியாபாரம் ரூ. 3000 தான் என்று ஏற்பட்டால் அவ் வருடத்திற்கு விற்பனை வரியே கிடையாது. வியாபாரியானவர் வாடிக்கைக்காரர்களிடமிருந்து விற்பனை வரிக்காக என்று வசூலித்த தொகைகளை மட்டில் சர்க்கார் எடுத்துக் கொண்டு பாக்கி அவர் கட்டிய தொகைகளைத் திருப்ப வாபஸ் செய்துவிடுவார்கள். வியாபாரியின் கணக்கை நம்பாமல் உத்தேசமாக அவருக்கு ரூ. 10,000 வியாபாரம் நடந்திருப்பதாகத் தீர்மானித்து வரி விதிக்கவும் விற்பனை வரி அதிகாரிக்கு உரிமை உண்டு.

பலதாரத்தடைச் சட்டம்.

198. கேள்வி: (காசிராஜ படைசாச்சி-பின்னலூர்.) இந்து ஒருவருக்கு முதல் தாரமும் பெண் குழந்தைகளும் இருக்கும்போது, அவர் முதல் மனைவி சம்மதமில்லாமல் மறுதாரம் கலியாணம் செய்து கொள்ளலாமா? அப்படிச் செய்தால் முதல் மனைவிக்கும் பெண் குழந்தைகளுக்கும் சலுகை உண்டா?

பதில்: இரண்டாம் தாரம் எப்பொழுது கலியாணம் செய்து கொண்டார்? சென்னைப் பலதாரத் தடைச்சட்டத்திற்கு முன்பா, பின்பா? அச்சட்டத்திற்கு முன்பாக இருந்தால், அவர் முதல் மனைவியின் சம்மதமில்லாமலே மறுதாரம் மணம் செய்து கொண்டது சட்ட விரோதமல்ல. அதனால் முதல் மனைவிக்கு ஒரு சலுகை மட்டில் உண்டு. அவள் புருடனுடன் வசிக்க மறுத்து, தனி ஜீவனாம்சம் கேட்கலாம். பலதாரத் தடைச் சட்டத்திற்குப் பிறகு முதல் மனைவியின் விவாகத்தை ரத்துச் செய்யாமல் அவர் இரண்டாவது மணம் செய்து கொள்ளுவது குற்றமாகும். இரண்டாவது கலியாணமும் செல்லாது. முதல் மனைவி சம்மதித்தால் கூடச் செல்லாது. பலதாரத்தடைச் சட்டம் அமுலுக்கு வந்த தேதி—29-3-1949.

பிரிந்து போன இந்து சகோதரர்கள்

199. கேள்வி: (L 1 2 4 8) இரண்டு இந்து சகோதரர்கள் பாகம் பிரித்துக் கொண்டனர். மூத்த சகோதரர் மனைவியையும் ஒரு பெண் குழந்தையையும் விட்டு விட்டு இறந்தார். நிலப் பட்டா இளைய சகோதரருக்கும் மூத்தவர் மனைவிக்கும் கூட்டாகவே சுமார் இருபது வருடங்கள் இருந்தும், சொத்துக்களை எல்லாம் இளைய சகோதரரே அனுபவித்து வந்தார். இளைய சகோதரருக்கு ஆண் குழந்தைகள் உண்டு. இளைய சகோதரரும், மூத்த சகோதரருடைய மனைவியும் இறந்து விட்டால், மூத்தவருடைய பெண்ணுக்குச் சொத்தில் பாகம் உண்டா?

பதில்: பாகம் பிரிந்து போன மூத்த சகோதரருடைய பாகச்சொத்துக்கு அவருடைய பெண் தான் வாரிசு. பிரித்துக் கொண்ட சொத்துக்களை மூத்தவர் மனைவியும் இளைய சகோதரரும் சம்மதித்து ஒன்றாக அனுபவித்து வந்திருந்தாலும் பாதகமில்லை.

நைட்ரிக் ஆசிட்

200. கேள்வி: (நாகராஜன்—நாகூர்) நைட்ரிக் ஆஸிட்டைச் சில்லறை விற்பனை செய்ய லைசென்சு தேவையா? லைசென்சு இல்லாமல் ஒரு நபர் எத்தனை பவுண்டு வைத்துக் கொள்ளலாம்?

பதில்: லைசென்சு வேண்டும். லைசென்சு இல்லாமல் கொஞ்சம் கூட வைத்திருக்கக் கூடாது.

1945 ல் ஒத்தி 'மேடோவர்'

201. கேள்வி: (டேவிட்—முணர்) சென்னை ராஜ்யத்தில் 1925 ஆம் வருடத்தில் ஒருவர் தம்முடைய நஞ்சை நிலங்களை ரூ. 3500 க்கு ஒத்தி வைத்தார். ஒத்திதார் 1945ல் ஒத்தியை வேறு ஒருவருக்கு 'மேடோவர்' செய்து விட்டார். ஒத்தி மேடோவரான இரண்டு மாதத்திற்குள் நிலச்சுவான்தார் மேடோவர் தாரிடமே ரூ. 1500 புதிதாகக் கடன் வாங்கி,

முதல் ஒத்தியைக் கட்டுப் படுத்தி மேல் ஒத்தி ஒன்று எழுதிக் கொடுத்தார். ஒத்திதார் நிலங்களை அனுபவித்து வருகிறார். சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி ஷை ஒத்தித் தொகையில் கழிவு ஏற்படுமா?

பதில்: 1945ல் மேடோவர் பெற்ற ஒத்தித் தொகையில் எவ்விதக் கழிவும் ஏற்படாது. இரண்டாவது ஒத்தித் தொகையில் வருஷம் ஒன்றுக்கு 30ல் 1 பங்கு வீதம் கழிவு ஏற்படும்.

பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் 'ஹைவேஸ்' ரோடுகள்.

202. கேள்வி: (சீனுவாசய்யர்—சோழவந்தான்.) ஒரு மேஜர் பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்ட 'ஹைவே' ரோட்டின் புறம்புகள் ஆக்கிரமிப்பை ஷை பஞ்சாயத்துப் போர்டாரிடம் மனுச்செய்து கொண்ட பிற்பாடும் கவனிக்காமல் இருந்தால், மேற்கொண்டு யாருக்கு அந்தப் புறம்புகளை அப்புறப் படுத்த மனுச் செய்து கொள்ளவேண்டும்?

பதில்: பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் 'ரோடு'கள் எல்லாம் பஞ்சாயத்திற்குச் சொந்தமாகா. சர்க்கார் 'ஹைவேஸ்' என்று தரம் பிரிக்கப்பட்ட ரோடுகளும் ஜில்லா ரோடுகள் என்று தரம் பிரிக்கப்பட்ட ரோடுகளும் நீங்கலாகப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட மற்றப் பொது ரோடுகள் தான் பஞ்சாயத்துக்குச் சொந்தமாகும் (பஞ்சாயத்துச் சட்டம்—செக்ஷன் 56 (1).) ஆகையால் ஹைவே ரோடில் ஏற்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புக்களை அகற்றச் சர்க்காருக்குத்தான் அதிகாரம். ஜில்லா கலெக்டருக்கு மனுப் போடலாம்.

மெஜாரடி ஆதரவு இல்லாத பஞ்சாயத்துத் தலைவர்

203. கேள்வி: (ராஜன்) ஒரு பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர் தமக்கு ஆதரவாக மெஜாரிட்டி மெம்பர்கள் இல்லாமல், தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் தம் இஷ்டப்படி செய்தால், இந்தக் காரியத்தின் மதிப்பு எப்படி? அவரை மெம்பர்கள் எப்படித் திருத்துவது.

பதில்: பஞ்சாயத்துப் போர்டுத் தலைவருக்கு ஒரு விசேஷ பொறுப்பும் அதிகாரமும் உண்டு. பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 28-ன்படி சில பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள் (எக்சிகூடிவ் ஆபீசர்கள்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படாத பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் தான் அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிகளுமாவார்கள். (பஞ்சாயத்துச்சட்டம்-செக்ஷன் 2 (7) நிர்வாக அதிகாரி என்ற முறைமையில் பஞ்சாயத்துத் தலைவருக்குச் சில விசேஷ உரிமைகள் உண்டு. பஞ்சாயத்து மெம்பர்களைக் கலக்காமலே சில காரியங்களைச் செய்ய நிர்வாக அதிகாரியானவர் கடமைப்பட்டவர். மேலும் பஞ்சாயத்தின் தீர்மானங்களை நிர்வாக அதிகாரிதான் நிறைவேற்றவேண்டுமென்று இருந்தாலும், எந்தத் தீர்மானமாவது சட்ட விரோதமானதென்றோ, அத் தீர்மானம் செய்யப் பஞ்சாயத்துக்கு அதிகாரமில்லை என்றோ நிர்வாக அதிகாரிக்குத் தோன்றினால் அவர் அவற்றை நிறைவேற்றாமல் அதைப்பற்றிச் சர்க்காருக்குத் தெரிவித்து, சர்க்காரின் உத்தரவுப்படி அவர் நடத்தவேண்டும். மேலும் சில அவசர சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்தின் தீர்மானம் இல்லாமலே நிர்வாக அதிகாரி சில காரியங்களைச் செய்து விடலாம். (செக்ஷன் 30, 31.) ஆகையால் பஞ்சாயத்துத் தலைவர் நிர்வாக அதிகாரி என்ற முறைமையில் செய்யும் காரியங்களின் தன்மை என்ன என்று தெரிந்தால் தான் அவர் செய்தது சட்டப்படி சரியா அல்லவா என்று சொல்லலாம். சட்டத்தால் அனுமதிக்கப்படாத காரியங்களைச் செய்ய அவர் பஞ்சாயத்துப் பணங்களைச் செலவு செய்தால் தணிக்கை நடக்கும்போது அவர்மீது 'சர்சார்ஜ்' ஏற்படும். அதாவது அவர் தம் கையிலிருந்து அப்பணங்களைப் பஞ்சாயத்துக்குக் கட்டும்படி நேரிடும். வேணுமென்று எப்பொழுதும் சட்ட விரோதமாக நடக்கும் தலைவர்களை அகற்ற, சர்க்காருக்குத் தான் அதிகாரம் (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 47 (1) பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது மெம்பர்கள் அல்ல. பஞ்சாயத்துத் தலைவர் தம் ஸ்தானத்தில் நீடித்திருக்க, மெம்பர்களின் 'மெஜாரிட்டி' பலம் அவருக்குத் தேவையுமில்லை.

பிரிபடாத இந்து சகோதரர் வாங்கும் நிலம்

204. கேள்வி: (பொன்னையா — லகிம்பூர்—அஸ்ஸாம்) பிரிபடாத இந்துக் குடும்பத்தில் நான்கு சகோதரர்கள், மேஜரானவர்கள். நான்காவது சகோதரர் தனித்த சம்பாத்தியத்தில் பூமி வாங்கினால், அப்பூமியில் மற்ற மூன்று சகோதரர்களுக்கோ அவர்களுடைய மக்களுக்கோ பாத்தியம் உண்டா?

பதில்: இல்லை.

அதிகாரிகளுக்கு எழுதப்படும் கடிதங்கள்

205. கேள்வி: (சுப்பிரமணியன் — காவேரிபுரம்.) மேலதிகாரிகளுக்கு எழுதும் கடிதங்

களுக்குப் பதில் கிடைக்காததைப்பற்றி சட்டப்படி என்ன செய்யலாம்? அதிகாரிகள் பதில் கொடுக்க வேண்டியதில்லை எனச் சட்டமிருக்கிறதா?

பதில்: அதிகாரிகள் சட்டப்படி செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. இவற்றை அவர்கள் செய்யாவிட்டால் அந்தந்த விஷயத்தின் ரீதிக்குத் தக்கப்படி அதற்கு சர்க்காரிடமோ, கோர்ட்களிலோ பரிகாரம் தேடிக்கொள்ள இடமுண்டு. ஆனால் பொது மக்கள் எழுதிக்கொண்டிருக்கும் கடிதங்களுக்கெல்லாம் அவர்கள் பதில் போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்ற கடமை அவர்களுக்கு இல்லை. சில அதிகாரிகள் மரியாதைக்குப் பதில் கடிதம் போட்டாலும் போடுவார்கள். ஆனால் சாதாரணமாக, அவர்கள் பொது மக்களுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளுவதில்லை. அப்படி எல்லாக் கடிதங்களுக்கும் அவர்கள் பதில் போடவேண்டுமென்று ஒரு விதி இருந்தால் அவர்களுக்கு இந்த வேலை தான் சரியாக இருக்கும். சர்க்கார் நடக்காது.

விவாகத்திற்கு வயது

206. **கேள்வி:** (ரமணீ—முத்து நகர்.) விவாகமாகும் மணமகனுக்கும் மணமகளுக்கும் சட்டப்படி வயது என்ன இருக்கவேண்டும்?

பதில்: 1929ஆம் வருடத்திய பால்ய விவாகத் தடைச் சட்டப்படி விவாகம் செய்து கொள்ளும் ஆண் 18 வயது பூர்த்தி ஆனவராகவும், பெண் 15 வயது பூர்த்தியானவளாகவும் இருத்தல் வேண்டும்.

18772

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்
ருக்மணி ஸில்க் எம்போரியம்
பெரிய தெரு, :: கும்பகோணம்
ஹெட் ஆபீஸ் :
PHONE 84188
மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்
மதராஸ்.

வெண்சங்கு நறுமணா
குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.
உரிமை
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..
சீயக்காய்த் தூள்

உ
ஸ்ரீ மகாலெக்ஷ்மி துணை
திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள
ஸ்ரீ திருச்சி கபே
ஹோட்டலில் கை தேர்ந்த
பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்
இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.
டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு
ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை
செய்யப்படும். ஒருமுறை விஜயம்
செய்யவும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. RAMARATNAM, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்
கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டி
யுடன் கிடைக்குமிடம் :

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி
பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,
கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

பெங்களூர் காஞ்சீபுரம் கும்பகோணம்
பட்டுச் சேலைகள் நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்க : : மூர்த்தி கம்பெனி

கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி.,

உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஷா & சன்ஸ்
தபால்பெட்டி நீ. 20.
புதுக்கோட்டை.

Wrapper Printed at The Andavan Press, Kumbakonam.

Regd. No. M. 5399. THE "VAKIL" October 1953

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்குவளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்.
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊது
வத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

For Coimbatore, Palghat & Nilgiris:

B. BALAPATTABI CHETTIAR,
246, Vysyal Street,
COIMBATORE.